இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2020. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 144 | இதழ் : 02 | திகதி : 26.01.2020 | விலை : 30.00

நான் உதவி செய்யாவிடில் இவருக்கு என்ன நேருமோ? நல்ல சமாரியனின் கேள்வி எமது கேள்வியாக வேண்டும்

குருக்கள், துறவியர் கருத்தரங்கில் யாழ் ஆயர்

துயருறுவோர் ஆண்டின் செயற்பாடுகளுக்கு தயார் செய்யும் முகமாக குருக்கள், துறவியருக்கு நடாத்தப்பட்ட கருத்தரங்கில் உரை வழங்கிய யாழ் ஆயர் பேரருட் கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் நல்ல சமாரியனின் உவமையை மேற் கோள்காட்டித் துயருறுவோர் மட்டில் நமக்குள்ள கடமையை விளக்கினார்.

காயப்பட்டுக் குற்றுயிராய் கிடந்தவனைக் கண்ட நல்ல சமாரியன் அவனைக் கண்டும் காணாதவர் போலச் சென்ற ஏனைய வர்களைப் போலன்றி தனக்குள்ளே கேட்ட கேள்வி 'நான் இவருக்கு உதவி செய்யாமல் போனால் இவருக்கு என்ன ஆகுமோ?' என்பதாகும் என்று கூறிப் பல்வேறு துன்பங்கள், தேவைகளோடு இருப்போரை நாம் சந்திக்கும்போது இதே கேள்வியையே கேட்பவர்களாக அவர்களுக்கு உதவி செய்து அவர்களின் துயர் துடைக்க வேண்டும் என்று கூறினார். இதுவே இந்த ஆண்டின் நோக்கம் என்றும் தெளிவுப்படுத்தினார்.

ஆயரின் உரையைத் தொடர்ந்து இவ் ஆண்டின் மையக்கருத்தின் அர்த்தத்தை விவிலிய ஆதாரங்களோடு விளக்கி அருட்பணி மத்தியூ OFM.conv அடிகளின் சிறப்புரை இடம்பெற்றது.கருத்தரங்கில் முக்கிய பகுதியாக யாழ் மறைமாவட்டத்தில் பணியாற்றும் எல்லா ஆணைக்குழுக்களின் இயக்குநர்கள்,பிரதிநிதிகளால் துயருறுவோர் ஆண்டுத் திட்டங்கள் பற்றி விளக்கமளிக்கப்பட்டது.

சுமார் 200 வரையிலான குருக்கள், துறவியர் பங்குகொண்ட இக்கருத்தரங்கு கடந்த 25.01.2020 அன்று யாழ் பாதுகாவலன் மண்டபத்தில் நடைபெற்றது. குருக்கள், துறவிகள் ஆணைக்குழுவின் இயக்குநரும், குருமுதல்வருமாகிய அருட்பணி P.J.ஜெபரட்ணம் அடிகள் இதனைத் தலைமைதாங்கி நடாத்தினார்.

யாழ். ஆயரால் துயருறுவோர் ஆண்டு உத்தியோக்பூர்வமாக ஆரம்பித்துவைப்பு

சில்லாலைப் பங்கில் அமைந்துள்ள புனித ஜோசப் வாஸ் திருத்தலத் தில் 18.01.2020 சனிக்கிழமை அன்று நடைபெற்ற வருடாந்தத் திரு விழாவின் நிறைவில் யாழ். மறைமாவட்ட ஆயர் அருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையினால் யாழ். மறைமாவட்டத்தில் இவ்வருடம் கடைப்பிடிக்கப்படும் "துயருறுவோர் ஆண்டு" உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன் அடையாளமாக இவ்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த கொடி ஆயர் அவர்களினால் ஏற்றிவைக்கப்பட்டது. திருவிழாத் திருப்பலியில் மறையுரையாற்றிய குருமுதல்வர் அருட்திரு P.J.ஜெபரட்ணம் அடிகள் புனித ஜோசவ் வாஸ் இலங்கையில் ஆற்றிய பணியைத் துயருறுவோருக்கு ஆற்றிய பணியாகச் சுட்டிக்காட்டி, புனிதரின் பணிக்காலத்தில் வாழ்ந்தோரை, விசுவாசத்தைக் காப்பதற்காகத் துயருற்றோர், உடல் நோயினால் துயருற் றோர். இயற்கையின் சீற்றத்தால் துயருற்றோர் எனவகைப் படுத்தி அவர்களுக்குப் புனிதர் ஆற்றிய பணிகளைக் கோடிட்டுக்காட்டி, இவ்வாண்டில் யாழ். திருஅவை ஆயர், குருக்கள், துறவியர், பொது நிலையினரென இணைந்து பல நிலைகளிலும் துயருறுவோருக்கு ஆற்ற வேண்டிய பணிகளைச் சுட்டிக்காட்டினார்.

வல்வெட்டித்துறை புனித செபஸ்தியார் ஆலய விசுவாச வாழ்வின் 300 ஆண்டு நிறைவு

வல்வெட்டித்துறை புனித செபஸ் தியார் ஆலயத்தில் கடந்த 20.01.2020 அன்று யாழ் ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப் பிரகாசம் ஆண்டகை தலை மையில் நடைபெற்ற திருவிழாவின் போது இப்பகுதியில் கத்தோலிக்க விசுவாசம் விதைக்கப்பட்ட 300 ஆண்டுகள் நிறைவு மிக விமரி சையாக நினைவுகூர்ந்து கொண் டாடப்பட்டது.

இதனையொட்டி விழாத் திருப்பலி நிறைவில் நடைபெற்ற நிகழ்வின் போது சிறப்பு மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது. தனது ஆசிச் செய்தியில் யாழ் ஆயர் அவர்கள் வரலாற்றுச் சிறப்பும், பழமை வாய்ந்ததுமான இவ் ஆலயம் முழுமை நிலையை அடைய பல இடர் நிறைந்த வளர்ச்சிப்படி களைத் தாண்டி இன்று புதுப்பொலிவு பெற்றுக் காணப்படுகின்றது என்று குறிப்பிட்டதோடு, தொடருகின்ற புதிய நூற்றாண்டிலும் இறை மக்களுடைய விசுவாசப் பயணம் மென்மேலும் வளரவும், புனித செபஸ் தியாரின் பரிந்துரையும் இறைவனின் அருள் ஆசீர்வாதங்கள் நிறைவாகக் கிடைக்கவும் வாழ்த்தினார்.

சொற்ப குடும்பங்களைக் கொண்ட இப்பங்கு மக்கள் இடம்பெயர்ந்து, புலம்பெயர்ந்து வாழ்கின்றபோதும் இச்சிறப்பு நிகழ்விற்காக ஒரே குடும்பமாக ஒன்றுகூடி இவ் விழாவைச் சிறப்புற ஒழுங்கு செய்திருந்தமை பாராட்டப்படக்கூடியதாகும்.

சுற்றுச்சூழல் ஆன்மீகம் இன்றைய அவசரத் தேவையாகும்

குருக்கள், துறவியருக்குக் குருமுதல்வர் அழைப்பு

கடந்த 25.01.2020 அன்று குருக்கள், துறவியர் மத்தியில் சுற்றுச்சூழல் பராமரிப்பினது அவசியம் பற்றி யாழ். மறைமாவ-ட்டக் குருமுதல்வர் அருட்பணி P.J.ஜெபரட்ணம் அடிகளார் கருத்துரை வழங்கியபோது சுற்றுச்சூழல் மட்டிலான ஆன்மீ-கத்தை நாம் எமக்குள்ளே வளர்த்துக் கொண்டாலன்றி சுற்றுச்சூழல் பராமரிப்பின் முக்கியத்துவத்தையும் அதன் அவசியத்தையும் எம்மால் உணர முடியாது என்று குறிப் பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: இறை வனால் படைக்கப்பட்டு நல்லது எனக்கண்ட நாம் வாழும் அழகிய பூமியைப் பராமரிக்க வேண்டியது எமது பொறுப்பாகும். இப் பூமி மனிதனுக்கு மட்டுமே உரியது என்ற தவறான நிலைப்பாட்டிலிருந்து நாம் விடு பட்டு இப்பூமியில் படைக்கப்பட்ட அனைத்துப் படைப்புகளும், அதாவது மிருகங்கள், வானத்துப் பறவைகள், ஊர்வன, கடல்வாழ் உயிரினங்கள், மரம், செடிகள் எல்லாவற் றுக்குமே வாழ்வதற்கான உரிமையுண்டு என்பதை நாம் உணர வேண்டும். மற்றப் படைப்புக்களை அழித்து நாம் மட்டும் வாழ்ந்தால் போதும் என்ற சுயநலப் போக்கை மனிதன் கைவிடவேண்டும்.

(தொடர்ச்சி 02ம் பக்கம்)

"துயருறுவோர் மட்டில் கரிசனை கொள்கின்ற பரந்த மனப்பாங்கினை மாணவர்களிடம் ஏற்படுத்த வேண்டும்"

மறையாசிரியர்களுக்கான கருத்தமர்வில் யாழ் குருமுதல்வர்



மலர்ந்துள்ள 2020ஆம் ஆண்டின் சிறப்புச் செயற்பாடாக யாழ் மறைமாவட்ட ஆயரினால் பிரகடனப்படுத்தப்பட்ட "துயருறுவோர் ஆண்டில்" பங்கு மறைக்கல்வி மாணவர்களிடையே செயற்படுத்துவதற்காக ஒழுங்கமைக்கப்பட்ட பாடத்திட்டக் கருத்தமர்வின் போது (10.01.2020) சிறப்புரை ஆற்றிய யாழ். குருமுதல்வர் அருட் கலாநிதி P.J.ஜெபரட்ணம் அடிகளார் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்,

அவர் தொடர்ந்து தமது உரையில் தெரிவிக்கையில், துயருறுவோர் ஆண்டின் பிரகடனத்திற்கமைய மாணவர்கள் மத்தியில் இவர்கள் மட்டிலான விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களுக்கான வழி காட்டல்களை தறைக்கல்விப் பணியூடாக முன்னெடுப்பது மறையாசிரி யர்களின் தலையாய பொறுப்பாகும். (தொடர்ச்சி 02ம் பக்கம்)

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)

எமது எண்ணம்

இறைவார்த்தை வாழ்வாகுமா?

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இவ்வாண்டு ஜனவரி மாதம் நான்காம் ஞாயிறு தினத்தை இறைவார்த்தை ஞாயிறாகப் பிரகடனப்படுத்தியதன் பின்னணியில் 26 ஆம் திகதி ஞாயிறை இறைவார்த்தை ஞாயிறாக நாம் கடைப்பிடிக்கின்றோம். இறைவார்த்தையின் முக்கியத்துவம் இஞ்ஞாயிறு திருவழிபாட்டில் பல நிலைகளிலும் எமக்கு எடுத்துக்கூறப்படுகின்றது. வாசகங்கள், மறையுரைகள், செபங்கள் மற்றும் செயற்பாடுகள் அனைத்திலும் திருநிலையினரும் பொதுநிலையினரும் இறை வார்த்தைக்கு முக்கியத்துவம் அளிக்கும் தினமாக இத்தினத்தை எதிர்கொள்கின்றோம். இறைவார்த்தையின் முக்கியத்துவம் இன்றைய தினத்துடன் மட்டும் நிறைவுபெறாது எமது வாழ்வில் அனைத்து நாட்களுமே இறைவார்த்தைக்கு முதன்மை கொடுக்கும் நாட்களாக அமைய வேண்டும் என்பதில் நாம் அனைவரும் கருத்தாயிருக்க வேண்டும்.

இறைவார்த்தையை நாம் வாசிக்கும் போது அதனை ஒரு கடிதத்தை அல்லது கதையை அல்லது செய்தியை வாசிப்பது போல வாசித்துவிட்டு செல்வோமாக இருந்தால் எவ்வித பயனும் விளையப்போவதில்லை. இன்று நாம் எல்லோரும் ஏதோ ஒரு வகையில் இறைவார்த்தையை வாசித்து வருகின்றோம். அனைவருடைய இல்லங்களிலும், கைகளிலும் திருவிவி லியம் இருக்கின்றது. திருவிவிலிய நாட்காட்டி அனைவர் வீடுகளின் சுவர்களில் காட்சி தருகின்றது. இவற்றுக்கு மேலாக 'அருள் வாக்கு' என்னும் நாட்குறிப்பேட்டையும் நாங்கள் வைத்திருக் கின்றோம். இவை அத்தனையும் இருந்தும் இறை வார்த்தை எம் வாழ்வில் ஆழமாக வேரூன்றி வாழப்படாது விடின் புறக்குடத்தில் வார்த்த நீராகவே எல்லாம் அமைந்துவிடும்.

இன்று இறைமக்கள் பலருக்கு இறைவார்த்தையின் பொருள் ஆழமாக விளங்குவதுமில்லை, அதனை விளங்கிக் கொள்ள அவர்கள் முனைவதும் இல்லை. இதனால் இவை வெற்று வார்த்தைகளாகவே அவர்களது மனங்களில் விழுந்து பாறைகள் மீதும், முட்புதர்கள் மீதும் தூவப்பட்ட விதைகளாக பயனற்றுப் போகின்றன.

வீட்டில் மகன் நேரமாகியும் தூங்கிக்கொண்டிருந்தான். அம்மா மகனை எழுப்பியும் எழுந்திருக்கவில்லை. இறுதி யாக இயேசு சொன்னதுபோல சொன்னால் செய்வானோ என நினைத்துக் கொண்டு, "மகனே! உன் படுக்கையை எடுத்துக் கொண்டு போ" என்றாள். மகன் மட்டும் குறைந்தவனா 'அம்மா! எனது நேரம் இன்னும் வரவில்லை" எனப் பதில் கூறினான். இறைவார்த்தை மட்டில் எமது நிலையும் இன்று இப்படித்தான் இருக்கின்றது.

கிறிஸ்து இயேசு இவ்வுலகத்தில் வாழ்ந்த காலத்தில் அவரது வார்த்தைகள் எத்தனையோ அற்புதங்களைச் செய் திருக்கின்றன. இறந்தவர்களை உயிர்ப்பித்தமை அவரது வாயி லிருந்து புறப்பட்ட வார்த்தைகளின் வல்லமையின் வெளிப்பாடாகும். "லாசரே வெளியே வா" " இளைஞனே எழுந்திரு" என்ற அவரது வார்த்தைகள் லாசரையும், நயீம் ஊர் கைம்பெண்ணின் மகனை யும் மரணக்கட்டிலிருந்து விடுவித்ததை நாம் அறிவோம்.

பாவிகளின் மனமாற்றமும் இயேசுவின் வார்த்தைக ளால் விளைந்தன. "சக்கேயுவே இறங்கி வா" என சக்கேயுவை அவன் பாவத்திலிருந்து விடுதலை பெற்று இறங்கிவரச் செய்த இயேசு விபச்சாரத்தில் கையும் மெய்யுமாகப் பிடிபட்ட பாவிப்பெண்ணுடன் வந்திருந்த யூதர்களின் பாவ நிலைகளை எடுத்துக்காட்ட "உங்களில் பாவமில்லாதவன் முதல் கல்லை எறியட்டும்" என்ற வார்த்தை மூலம் அங்குள்ளவர்களின் பாவ வாழ்வை மாற்றியமைத்தார்.

பரிசேயர், சதுசேயர், வேதபாரகர் என்போருடன் அவர் புரிந்த விவாதங்கள் வார்த்தைகளாக வெளிப்பட்டு உள்ளார்ந்த உண்மையை அவர்களுக்கு உறைக்க வைத்தது. மரணத் தீர்வை இடப்பட்ட நேரத்தில்கூட இயேசு தனது வார்த்தைகளால் அங்கிருந்தோரின் உள்ளங்களை ஊடுருவினார். சிலுவையில் அவர் சிந்திய ஏழு வார்த்தைகள் ஆழமான இறையியல் கருத்துக்களைக் கொண்டவையாக எமது பாவங்களுக்கான மீட்பின் சாதனங்களாக அமைந்திருப்பதைக் காணலாம்.

புதிய ஏற்பாட்டில் மட்டுமன்று, பழைய ஏற்பாட்டிலும் இறைவார்த்தைக்கு வல்லமை இருந்ததைப் பல இறைவாக் கினர்களின் வார்த்தைகள் விளம்பி நிற்கின்றன. இவற்றை நோக்குகையில் இறைவார்த்தையின் வல்லமை, அதன் விளைவு அபரிமிதமானது என்பதை எம்மால் உணர முடிகின்றது.

நாம் இன்று இறை வார்த்தையை வாசிக்கின்றோம். நன்றாக மனனம் செய்து வைத்திருக்கின்றோம். இல்லங்களில் காட்சிப்படுத்தியும் வைத்திருக்கின்றோம். ஆனால் அதன் பொருள் உணராது எம் வாழ்வில் அதைக் கடைப்பிடித்து வாழாது இருப்பதனால் எமது வாழ்வில் தீமைகளும், துன்ப துயரங்க ளும் அவலங்களும் பெருகி நாம் அல்லற்படுகின்றோம். அன்று அன்னை மரியாள் இறைவனின் வார்த்தையைக் கேட்டார் அதனை ஏற்றுக்கொண்டார், "உமது வார்த்தையின் படியே எனக்கு ஆகட்டும்" என்றாள். விளைவு கடவுளின் தாயாகும் பேறு பெற்றதுடன் உலகின் தாயாகவும், திரு அவைக்குத் தாயாகவும் தன்னை ஏற்படுத்தி விண்ணேற்றமும் அடைந்தார். இத்தகைய பேறு நிலை பெற்றவர்களாக எம் வாழ்வும் அமையவேண்டுமானால் 'ஒரு வார்த்தை மட்டும் சொல்லியருளும் என் ஆன்மா குண மடையும்" என்று மனனம் செய்ததை ஒப்புவிக்கும் எண் கணித வாய்ப்பாடாக இறைவார்த்தையைக் கருதாது எம் விசு வாசத்தைக்கட்டியெழுப்பும்ஆன்மஉணவாகஇறைவார்த்தையைச் சுவைப்போம்.

அருட்பணி.எஸ்.எமின்சிலி றொஷான்

விருந்தோம்பல் எனும் பண்பிற்கு முக்கிய இடம் கொடுப்போம்

திருத்தந்தை

ஒவ்வொருவரும், தங்களுடைய சமூ கங்கள் மீது மட்டும் அக்கறைகொள்ளும் வண்ணம், தங்களையே சுருக்கிக்கொள்ளாமல் அனைத்து மனித குலத்தின் மீதும் அக்கறை கொள்ளத் திறந்த மனதுடன் செயற்படவேண்டும் என அழைப்பு விடுத்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

கடந்த வாரம் சிறப்பிக்கப்பட்ட 53வது கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரத்தின் இறுதி நாளான சனிக்கிழமையன்று, பல கிறிஸ்தவ சபைக-ளுடன் இணைந்து செபவழிபாட்டை நடத்திய திருத் தந்தை பிரான்சிஸ் அவர்கள் கடந்த காலத் தடை-களை வெற்றிகொண்டு, கிறிஸ்தவ ஒன்றிப்பை அருகாமையில் கொள்ளவேண்டும் என அழைப்பு விடுத்தார்.

இறைவன் விரும்பும் ஒன்றிப்பை நோக்கி நாம் செல்லும்போது, விசுவாசத்தினுள் நம் சகோதரர்களாக இருப்பவர்களிடையேயும், தேவை யிலிருப்போருடனும் திறந்த மனதுடன் செயற்பட ஊக்கம் கிட்டும் என்றார் திருத்தந்தை.

உரோம் நகரின், புனித பவுல் பெருங் கோவிலில் கடந்த 25ம் திகதி மாலை, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தலைமையேற்று நடத்திய இந்த வழிபாட்டில், பல்வேறு கிறிஸ்தவ சபைக-ளின் தலைவர்களும் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

உலகின் கண்களுக்கு மிகச்சிறியதாக இருக்கும் கிறிஸ்தவ சமூகங்கள்கூட, தூய ஆவி யாரை அனுபவித்து, கடவுள் மற்றும் அயலார் மீதுள்ள அன்பால் தூண்டப்பட்டவர்களாக செயற்படும்போது,கிறிஸ்தவ சமூகம் முழுமைக் கும் உரிய ஒரு செய்தியைக்கொண்டுள்ளார்கள் என்று கூறிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் பல பகுதிகளில் துன்பங்களை அனுபவிக்கும் கிறிஸ்தவ சமூகங்கள் குறித்தும் சிந்திப்போம் என அழைப்பு விடுத்தார்.

மீட்பு என்பது அனைவருக்கும் உரி யது என்பதால், நம் சமூகங்களுக்காக மட்டும் உழைக்காமல், அனைவருக்காகவும் உழைக்கும் திறந்தமனதுடன் செயற்படவேண்டியது அவசியம் என எடுத்துரைத்தார், திருத்தந்தை பிரான்சிஸ்

கிறிஸ்தவ சமூகங்கள் மற்றும் குடும் பங்களில் பாரம்பரியமாக இருக்கும் விருந்தோம் பல் எனும் பண்பிற்கு, கிறிஸ்தவ சமூகங்களிலும், அனைத்து வாழ்வு நடவடிக்கைகளிலும் முக்கிய இடம் கொடுப்போம் என, மேலும் அழைப்பு விடுத்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

துயருறுவோர் மட்டில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாதது போன்று, சிறுவயதிலிருந்தே எம் மத்தியில் துயருறு வோர் யார்? அவர்களை எவ்வாறு இனங்காண வேண்டும். எத்தகைய பணிகளை அவர்களுக்கு ஆற்ற முடியும் என்பதைக் கற்றுக் கொடுக்க வேண்டும்,

தம்மைச் சூழ்ந்து வாழும் ஏழைகள், கைவிடப்பட்டோர் துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்படு வோர் மீது மாணவர்களின் கரிசனையைத் திசை திருப்பி அவர்களுக்காகத் தாம் என்ன செய்ய முடியும் என்பதைச் சிந்திக்க வழிப்படுத்த வேண்டும். இன்றைய மாணவர்கள் சுயநலமான மனப்பாங்குடன் வளர் கின்றனர். என் பெற்றோராலும் வளர்க்கப்படுகின்றனர். அடுத்தவர் மட்டில் அன்பு, இரக்கம் மன்னிப்புக் காட்டு கின்ற பண்புகள் அருகிச் செல்கின்றன. எல்லாவற் றிலும் நான் நிறைவாகவும் சந்தோஷமாகவும் இருந்தால் மட்டும் போதும் என்றே வளர்ந்து கொண்டி ருக்கின்றனர். இந்நிலை எமது எதிர்கால சந்ததி யினருக்கு மிகவும் ஆபத்தானது.

எனவே அடுத்து இருப்பவர் துயருற்று வாழும் போது அவர்கள் மட்டில் கரிசனை கொண்டு, தியாக மனப்பாங்குடன் தன்னை அர்ப்பணிக்கும் பரந்த மன நிலை மாற்றத்தை அவர்களுக்குக் கற்பிக்க மறையாசி ரியர்களின் உருவாக்கும் வகையில் உங்கள் கற்பித் தல் செயற்பாடுகள் அமைய வேண்டும். இதற்கான சிறப்பு செயற்றிட்டங்களுக்கு உங்கள் பூரண ஒத்து ழைப்பை வழங்கிச் சிறப்புடன் முன்னெடுக்க ஆசித்து நிற்கின்றேன் எனத் தெரிவித்தார்,

குருமுதல்வரின் சிறப்புரையைத் தொடர்ந்து அருட்பணி A.ஜேம்ஸ்நாதன் இவ்வாண்டின் கருப் பொருளுக்கு அமைய நாம் முன்னெடுக்கக் கூடிய செயற்பாடுகளைத் தமது விரிவுரையில் தெளிவுபடுத்தி னார். அதனைத் கொடர்ந்து கியூடெக் நிறுவன அலுவலர்களினால் புலம் பெயர் நாடுகளில் கத் தோலிக்க திருமணம் நிறைவேற்ற இருப்பவர் களுக்கான விழிப்புணர்வுக் கருத்துரை வழங் கப்பட்டது. ஈற்றில் மறையாசிரியர்கள் குழுக்களாகப் பிரிக்கப்பட்டு பாட ஆயத்தம் மேற்கொள்ளும் முறை தெளிவுபடுத்தப்பட்டதுடன் கருத்தமர்வு நிறைவை எய்தியது.

துயருறுவோர் ஆண்டிற்கான சிறப்புப் பாட ஆயத்தக் கருத்தமர்வுகள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி முல்லைத்தீவு போன்ற இடங்களில் முறையே 10.01.2020, 11.01.2020, 18.01.2020 ஆகிய தினங்களில் நடாத்தப்பட்டு வருடாந்த பாடத் திட்டமும் வருகை தந்த அனைத்து மறையாசிரி யர்களிடமும் கையளிக்கப்பட்டது. இச் செயற்றிட் டத்திற்கான சகல ஒழுங்குகளையும் திருவிவி லிய மறைக்கல்வி ஆணைக்குழு இயக்குனர் அருட்பணி A.F. பெனற் அடிகளார் சிறப்புற மேற் கொண்டிருந்தார்.

சுற்றுச்சூழல் ஆன்மீகம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இதனால்தான் இன்று காலநிலை மாற் றம், பூமியின் வெப்பம் அதிகரிப்பு, இயற்கை அனர்த்தங்கள், காற்று மாசடைதல் போன்ற விளைவுகளை அனுபவிக்கிறோம். பூமி, படைப் புக்கள் மட்டிலான எமது கடமைகளை நாம் நிறைவேற்றி அழிவிலிருந்து பூமியைக் காக்கும் கடமை எம் எல்லோருக்கும் உண்டு என்று அவர் தெரிவித்தார்.

எல்லாக் படைப்புக்களிலும் இறைவ-னின் பிரசன்னத்தை அனுபவித்து சுற்றுச்சூழல் ஆன்மீகத்தில் குருக்கள் துறவியராகிய நாம் வளர்ந்து இறைமக்களுக்கும், இவ் ஆன்மீக உருவாக்கத்தைக் கொடுக்க வேண்டுமென்றும் குருமுதல்வர் கேட்டுக்கொண்டார்.

தேசிய மட்டத்தில்...

(12ம் பக்கத் தொடர்ச்சி)

இப்போட்டியில் தீவக வலயத்திலிருந்து தேசியப் போட்டிக்குச் சென்ற இம் மூன்று அணிகளும் தமது திறமையைத் தேசிய அரங்கிலே நிலைநிறுத்தி அல்லைப்பிட்டிக் கிராமத்திற்கும் தீவக வலயத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார்கள். கடந்த 18ம், 19ம் திக திகளில் நாவலப்பிட்டி ஜெயதிலக்க மைதானத்தில் இடம் பெற்ற மேற்படி நிகழ்வினிலே மாணவர்கள் தமது சாதனையை நிலை நிறுத்தியுள்ளனர்.

1990ம் ஆண்டு இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளால் கைவிடப்பட்டிருந்த அல்லைப்பிட்டி றோ.க.த.க வித்தியாலயம் கடந்த 2013ம் ஆண்டு தனது மீள்பணத்தை ஆரம்பித்த நிலையில் 7வது ஆண்டில் தனது நாமத்தை தேசிய அரங்கிலே ஒலிக்கச் செய்திருப்பது தமிழர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருகின்ற செய்தியாகும். பாடசாலை ஆசிரியர் திரு.வி.வி.பத்மநாதன் தலைமையிலான ஆசிரியர் குழாமின் அயராத உழைப்பும் அல்லைப் பிட்டி பங்குத்தந்தை. அருட்பணி திரு. டேவிட் அடிக ளாரின் வழிகாட்டுதலும் நல்லாலோசனைகளும் மாணவர்களின் விடாமுயற்சியும் பெற்றோர் நலன் விரும்பிகளுடைய ஒத்துழைப்பும் இவ் வெற்றிக்கனியைச் சுவைக்கக் காரணங்களாக விளங்கியுள்ளன.

இவர்களுக்கான வரவேற்பு வைபவமும் கௌரவிப்பு நிகழ்வும் அல்லைப்பிட்டி றோ.க.த.க வித்தியாலயத்தில் 22.01.2020 புதன்கிழமை பங்குத்தந்தை மற்றும் உள்ளூர் அமைப்புக்களின் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதன்போது தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் திரு. ரவிச்சந்திரன் மற்றும் வேலணைக் கோட்டக்கல்விப் பணிப்பாளர், ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர், ஆசி ரிய ஆலோசகர்கள் முதலானோர் கலந்து மாண வர்களைக் கௌரவித்து வாழ்த்துரைகளையும் வழங்கியிருந்தார்கள். சிறப்பாக தீவக வலயக் கல் விப் பணிப்பாளர் அவர்கள் ஊர் கூடித் திருவிழாக் கொண்டாடுவது போல அல்லைப்பிட்டி மக்கள் ஒன்று கூடி மாணவர்களை வாழ்த்தி பாராட்ட முன் வந்தமை சிறப்பானது. என்றும் பிள்ளைகளுக்கு சமூகத்தவர்கள் உற்சாகமூட்ட வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

நிலையான வெற்றிக்காக

ந. ஹரிபிரகதீஷ்
வணிகவியலும், முகாமைத்துவமும்
களனி பல்கலைக்கழகம்

'வாழ்வில் ஒரே நோக்கத்துடன் செய்யும் பணியிலே இறுதிவரை நிலைத்திருப்பதிலும், அதை நிலையாக வைத்திருப்பதிலும் தான் நிலையான, உண்மையான வெற்றி அடங்கியுள்ளது' என்பது வெற்றியின் தத்துவம்.

வெற்றி என்பது நினைத்ததை அடைவதல்ல, மற்றவர்களைவிட, சற்று அதிகப்படியாக இருப்பதும் அல்ல, வெற்றி என்பதன் ஆரம்பமும், முடிவும்எது? வெற்றி என்பது எங்கே நிர்ணயிக்கப்படுகிறது? வெற்றியை நிரந்தரமாக்க என்ன வழி? வெற்றி நிலையில்லாமல் போவதற்கான காரணம் என்ன ?

உதாரணமாக ஒருவரிடம் நூறு கோடி ரூபாய் இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். இன்னொருவரிடம் நூறு கோடிக்கு மேல் ஐந்தாயிரம் ரூபாய் இருந்தால், முதல் நபரைவிட பெரிய பணக்காரர் என்று சொல்லலாமே தவிர வெற்றி பெற்றவர் என்று சொல்ல முடியுமா...? இவர்களைவிட மூன்றாம் நபரிடம் ஆயிரம் ரூபாய் அதிகமாக இருந்தால் மற்றவர்களை தோற்றவர்க ளாக சொல்லிவிட முடியுமா? ஆகவே வெற்றியின் தத்துவப்படி இது நிலைத்த வெற்றியல்ல. இன்று கடுமையாக உழைத்து பெரும் வெற்றி கண்டவர்கள் கூட சாதாரண சிறு விஷயத்தில் தோல்வி களைச் சார்ந்திருக்கிறார்கள். மலையில் ஏறுபவர்களுக்கு மலை உச்சியை அடைவது (வெற்றியின்) முடிவு. மலையை விட்டு இறங்குபவர்களுக்கு மலை அடி வாரம் (வெற்றியின்) முடிவாக அமை கிறது. இந்தச் செயலில் வெற்றி யாருக்கு? வெற்றி எங்கே இருக்கிறது? மலை உச்சியிலா? மலையடிவாரத்திலா?

ஓட்டப்பந்தயத்தில் பந்தய வீரர்கள் ஓட்டத்தைத் தொடங்கிய இடத்தி லேயே முடிப்பது தான் வெற்றியாக நிர்ணயிக்கப்படுகிறது. இதில் வெற்றியின் ஆரம்பமும், முடிவும் ஒரே இடத்தில் அமைந்துவிட்டது. இந்த மூன்று வகை களில் எந்த இடத்தில் வெற்றி என்பது நிர்ணயிக்கப்படுகிறது. முதலுக்கும், முடிவுக் கும் இடைப்பட்ட கால அளவு, முயற்சி, சூழ்நிலைகளில் தான் வெற்றி என்பது நிர்ணயிக்கப்படுகிறது என்பது புலனா கிறது.

இதேபோல்தான் வாழ்க்கையி லும் பிறப்பு ஒரு வெற்றி. இறப்பு ஒரு வெற்றி. வாழ்க்கைப்பயணத்தில் பிறப்பிற்கும், இறப்பிற்கும் இடைப்பட்ட காலத்தில்தான் நம் இறந்த காலக் காயங்கள், நிகழ்கால நிர்ணயங்கள், எதிர்கால இலக்குகள் வெற் றியை நிர்ணயிக்கிறது என்பது உண்மை. அப்போதுதான் பிறப்பு என்கின்ற வெற்றிச் சம்பவம், இறப்பு என்னும் வெற்றிச்சரித்திர மாக மாறமுடியும்.

தன்னலம் வெற்றி போலத் தோன்றும். தன்னலம் இன்பம் போலத் தோன்றும். ஆனால் அதனி லும் துன்பம் மற்றொன்று இல்லை. ஆதலால் அன்புடை யவராக விளங்க காண்பவர் கள் அனைவரையும் நேசித்த பிறகுகடைசியாக நம்மை நேசித்துக் கொள்ள வேண் டும். அதுவும் வாழ்தலுக்கா கவேயாகும்.

அன்பு இல்லையேல் பிறதுறைகளில் பெற்ற அறிவு, ஞானம்முதலியனகூடபயனற் றுப் போகின்றன. மானுடத் திற்கு உண்மையான வெற்றி அன்பினால் மட்டுமே. அன்பில்லையேல் மானுடம் வாழ்தல் அரிது. ஆதலால் அன்பு செய்வீர்! அன்பே இந்த உலகத்தினை இன்ப உலகமாக்க உள்ள ஒரே வழி!

யார் ஒருவருக்கு வெற்றியே இல்லை தோல்வி மேல் தோல்வி என்ற நிலை இருக்கின்றதோ, அவர்கள் நிலைத்த அன்புக்காக முயற்சிக்கவே இல்லை என்று அர்த்தம். அதுதான் உண்மையும் என்பதை உணர்ந்து அன்பு செய்யுங்கள். ●

சான்றுகள் பகர்வோம்

புத்தாண்டில் புதுவுறுதி எடுப்போம்
புரையோடிப் போன
புண்களை குணமாக்கி
பத்தோடு பதினொன்றாய்
அழிவடையாமல்
பார்வையை பதித்திடுவோம்
விவிலியத்தில்
கத்தோலிக்க திருவவையின்
சேனையிலே
கடமையுள்ள போர்வீரர் ஆகிடுவோம்
சத்திய மறையின் வழியினிலே
சான்றுகள் பகர்வோம் வாழ்வினிலே

புனிதர்கள் காட்டிய பாதையினை
பொது வாழ்வினிலும் கடைப்பிடிப்போம்
மனித மாண்பினை பேணியே
மற்றவர்க்கும் உதவிட முன்வருவோம்
கனிதருமரமாய் கடவுள் பார்வையில்
பணிசெய்வோம்
அன்னை மரியினைப்போல்
கனிவுடை யோராய்
மண்ணில் வாழ்ந்து
விண்ணக மகிமையைச்
சுதந்தரிப்போம்

அமீர்ராஜன் அன்ரனிபீற்றர்

காத்திருத்தல்

வாழ்க்கை ஒரு நாள் வளமாகும்
வானம் கூட வசமாகும்
புதிய திறமைகள் வெளிப்படும்
பழைய விருப்பங்கள் நிறைவேறும்
இனிய உறவுகள் மலர்ந்துவிடும்
உரசல்கள் தீர்ந்து, உறவுகள் வளர்த்து
நம்பிக்கையுடன் உழைத்துக் காத்திரு
வானம் கூட வசப்படும்
உன் வெற்றிக்கு
வானமே எல்லையாகும்.

உமது நினைவாற்றலை வளர்ப்பதற்கு சில வழிகள்...

அருட்பணி
மா.றேஜிஸ் இராசநாயகம்

நினைவாற்றலை நாம் நன்கு வளர்க்கலாம். சாதாரண புத்தியுள்ள எவ ரும் இதைச் செய்யலாம். இதை வளர்க்கும் படிமுறை நடைமுறை அறிவிலே தங்கியுள் ளது. ஒவ்வொரு அனுபவமும் ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட புலன்களிலோ பதிவை ஏற்படுத்தும். நினைவாற்றலை வளர்ப்பது என்பது இந்தப் பதிவுகளை ஒழுங்காக அமைத்து அவை அழியாமல் எளிதில் நினைவுக்குவரக்கூடியதாகச் செய் வது. இந்தப் பதிவு எவ்வளவு தெளிவாகவும் நேர்த்தியாகவும் இருக்கின்றதோ அவ்வள வுக்கு எளிதாக நினைவுக்குக் கொண்டுவர முடியும்.

1. மீண்டும் மீண்டும் சொல்வது மிகவும் அவசியமான - சிலவேளை கவர்ச்சியில்லாத - ஒரு வழி. மீண்டும் மீண்டும் சொல்லும் பொறுமை இருந்தால் நீர் எதையும் நினை வில்வைத்திருக்கலாம்.

2. நீர் நினைவில் வைத்திருக்க விரும் பினால் எத்தனை புலன்களை ஈடுபடுத்த முடியுமோ ஈடுபடுத்தும். முன்பின் அப்பிள் பழத்தைக் காணாத ஒருவருக்கு நீர் அதைக் காட்டுவதாக வைத்துக்கொள்வோம். அதைப் பார்த்தால்ஓரளவுமனப்பதிவுஏற்படும். ஆனால், அதைத் தொட்டு, நுகர்ந்து, சுவைத்தால் அதைவிடத் தெளிவான, நிலைத் திருக்கும் மனப்பதிவு ஏற்படும். விஞ்ஞான ரீதியான காரணம் என்னவென்றால், பார்வை மூலம் பெறப்படும் பதிவு வேறு உயிரணுவிலும், தொடுகை, சுவை மூலம் பெறப்படுபவை வேறு உயிரணு விலும்பதிவாகின்றது. ஒன்றைப் பற்றி எத்தனை பதிவுகள் ஏற்படுகின்றனவோ அவ்வள வுக்கு எளிதாக நீர் விரும் பும் நேரத்தில் உமது ஆழ்மனத் திலிருந்து அவற்றை வெளிக் கொணரலாம்.

மேற்கூறியது ஆட்கள், பெயர்களை நினைவில் வைத் திருப்பதற்கு முக்கியம். குறை வான நினைவாற்றலுள்ள ஒரு மேலா ளர் தனது நினைவாற்றலை வளர்க்கத் தீர்மானித்தார். யாராவது அவரைச் சந்திக் கப்போனால் அவரது சரியான பெயரைக் கேட்பார். தேவைப்பட்டால் எழுத்துக்கூட்டச் சொல்லுவார். இவ்வாறு ஒருவருடையபெய ரின் பதிவு அவருக்குத் தெளிவாக ஏற்பட்டது. அம்மனிதனுடைய பேச்சு, குணாதிசயம் என்பவற்றையும் கற்றுக்கொள்வார். இன்று அம் மேலாளர் பத்தாயிரம் பேரை பெயர் சொல்லி அழைக்கக் கூடியவராக உள்ளார்.

3. கூர்ந்து கவனிக்கும் தன்மையை வளர்த்துக்கொள்ளும்: சாதாரணமாக மக் கள் ஒன்றில் மட்டும் முழுப்புலனையும் செலுத்துவதில்லை. உரையாடலின்போது ஒருவர் சொல்லுவதை முழுக்கவனத்துடன் கேட்பதில்லை. அடுத்து தாம் என்ன சொல் லப்போகிறார்கள் என்பது பற்றிச் சிந்தித்துக் கொண்டிருப்பர். ஒரு காட்சியைப் பார்க்கும் போது அதன் உள்ளடக்கங்களில் கவனம் செலுத்துவதில்லை. கவனமென்பது நீர் நினைவில்வைத்திருக்கவிரும்பும்பொருளில் அனுபவத்தில் மட்டும் முழுப்புலனையும் செலுத்துவது. நீர் பின்னர் நினைவுபடுத்த விரும்பும் விபரங்களைக் குறித்துக்கொள் ளும்.

4. நினைவுபடுத்துவதற்கு இணைத் துப்பார்த் தல் ஒரு குறுகிய ஆனால் நிச்சயமான வழி: சில காலத்திற்கு முன் திரு. இயேசு தான் 25, எழில் வீதியில் வசிப்பதாக என்னைச் சந்திக்கும்போது கூறினார். உடனே நான் அதனை இயேசு பிறந்த 25ம் திகதியு டன் இணைத்துக்கொண்டேன். எல்லோருக் கும் இணைத்துப் பார்க்கக்கூடிய பல காரி யங்கள் உண்டு. எளிதாக இணைப்பை ஏற் படுத்தினால் இலகுவாக நினைவிற்கொள்ள லாம்.

5. உண்மையாக, ஆழமாக விரும்புதல்: துடுப்பாட்டத்தில் அதீத ஆர்வமுள்ள ஒருவர் துடுப்பாட்ட விபரம், வீரர்களின் பெயர் என் பனபற்றி மணிக்கணக்கில் பேசுவார். அதே நபர் ஒருவருடைய தொலைபேசி இலக்கத் தையோ, ஒருவருடைய பிறந்த நாளையோ நினைவில் வைத்திருக்கமாட்டார். எனவே, நினைவில் வைத்திருக்க விரும்பும் ஒன் றில்உண்மையானவிருப்பம்கொள்ளுங்கள்.

6. விளாங்கிக்கொள்ளும்: ஒரு கருத்தையோ, சந்தர்ப்பத்தையோ விளாங்கிக்கொள்ளா விடில் நினைவில் வைத்திருப்பது - கடினம். வேண்டிய நிகழ்வுகளுக்கிடையிலுள்ள தொடர்புகளைப் பார்க்கவேண்டும்.

7. நினைவில் வைத்திருக்கவேண்டியவற் றைத் தேர்ந்தெடுத்து முழுக் கவனத்தையும் அவற்றின்மேல் செலுத்தும். எவரும் எல்லா வற்றையும் நினைவில் வைத்திருக்கமுடி யாது. சிலர் நூற்றுக்கணக்கான தொலை பேசி எண்களை நினைவில் வைத்திருக்கப் பாடுபடுவர். இந்த நினைவாற்றலை வேறு பெறுமதியானவற்றை நினைவில் வைத் திருக்கப் பயன்படுத்தலாம். பல விபரங்களை குறிப்பேட்டில் வைத்துக்கொள்ளலாம். முடி யாதவற்றை ஆரம்பத்திலேயே செய்ய முயற் சிக்கவேண்டாம். ஆட்கள், பெயர்கள் நினை வில் வைத்திருப்பது கடினமென்றால், மூன்று அல்லது நாலு நபர்களின் பெயரை எடுத்து அவற்றில் உமது முழுக்கவனத்தையும் செலுத்தும். அவர்களின் பெயர், குணாங்கள் போன்றவற்றைக் குறித்துக் கொள்ளும். பின்பு நபர்களின் விபரங்களை மனத்தில் பதியும், இவற்றை மீண்டும் மீண்டும் பயிற்சி செய்யும். அதன் விளைவு அலாதியானது.

நன்மைகள் இன்று
நலிந்து போயின - உயர்
உண்மைகள் இன்று உறங்கிவிட்டன
பொய்மைகள் இன்று பெருமை
கொண்டன - மனப்
பொய்கைகளே இன்று
கலங்கிப்போயின

மனிதனா அவன் என்ற நினைப்பு
இல்லை இவனொரு
மிருகமென்ற மலைப்பு
புனிதமாயில்லை இவன் செய்யும்
உழைப்பு - இவன்
மனத்திலே காண்பது
நச்சு மலர்களின்
பூப்பு

குறுக்கு வழியில்
பணம் தேடுவதில் முயற்சி!
என்றும் குறுகிய எண்ணத்தோடு
வாழ்வதில் கவர்ச்சி !
செருக்குடன் வாழ்வதில்
மனத்திலே மலர்ச்சி - இவனோ
மறுமையில் முழ்குவது
நரக லோகத்தின் செருப்பு:

தீயது செய்வதுவே
அவனகத்து உதிர்ப்பு - என்றும்
திமிருடன் வாழ்வதிலேயே
அவனது முனைப்பு
நோயது வந்தால் இறைவனின்
நினைப்பு - அந்நோயோ
போயிடின் பழையதில் மனதின் பதிப்பு

விளைச்சலிதனால் விடமாக
மாறும் என்பது உண்மை - இதில்
விளக்கமின்றி இருக்கின்றானே
எப்போது வரும் விடிவு?

லி.பெனாசி

காவலன் கலசம்

நிறைவாய் வாழ்ந்து நிறைவாகப் பணிசெய்து நிறைவோடு விடைபெற்ற ஓய்வுநிலை அதிபர் அமரர் தே. தொம்மையப்பு

முன்னுரை

ஓய்வுநிலை ஆசிரியரும் அதிபருமான அமரர் திருவாளர் தேவசகாயம்பிள்ளை தொம்மையப்பு அவர்கள் தேவசகாயம் பிள்ளை ஞானப்பு தம்பதிகளின் ஐந்தாவது பிள்ளையாக மாத்தளன் மண்ணில் 22.12.1927இல் பிறந்தார். பிறந்த நான்காவது நாளில் 26.12.1927இல், அமலமரித்தியாகி சவிரிமுத்து இம்மானுவேல் அடிகளாரினால் மாத்தளன் புனித ஆரோக்கிய அன்னை ஆலயத்தில் திருமுழுக்குப் பெற்றார். சிறுவனாக இருந்தபோதே தன் தாயை இழந்துபோனாலும் கெட்டித்தனமுள்ள மாணவனாக வளர்ந்து வந்தார்.

ஒழுக்கமும் கல்வியும் இவருக்கு இரு கண்கள்

இவரின் புத்திக்கூர்மையை அவதானித்த அருட்பணியாளரும் அமலமரித்தியாகியுமான அருட்பணி செ. மரியாம் பிள்ளை அடிகளார், இவரின் கல்வியை யாழ்ப்பாணத்தில் தொடர இளவாலை றோ. க. த. வித்தியாலயத்திற்கு அனுப்பிவைத்தார். இவர் ஒழுக்கத்தையும் கல்வியையும் இரு கண்களாகக் கொண்டார். பாடசாலையில் சிறந்த மாணவனாகத் திகழ்ந்து, பரீட்சையில் திறமைச் சித்திபெற்று, 1948-1949 ஆகிய ஆண்டுகளில் கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெற்று, பயிற்றப்பட்ட ஆசிரியரானார். 1950 இல் பொகவந்தலாவை றோ. க. பாடசாலையில் உதவி ஆசிரியராகக் கால்பதித்தார். இவரின் கல்வித் திறமையைக் கண்ட அருட்தந்தை மதுரநாயகம், இவரை ஆசிரியரின் சொந்த ஊராகிய மாத்தளனுக்கு 1951 இல் இடம் மாற்றினார்.

வன்னிமண்ணில் வனப்பான பணிகள்

ஆறு ஆண்டுகள் தன் சொந்த மண்ணான மாத்தளனில் பணியாற்றிய பின், 1957இல் புதுக்குடியிருப்பு றோ. க. பாடசாலையில் உதவி ஆசிரியராகப் பணிகளைத் தொடர்ந்தார். இங்கு ஓராண்டு கல்விப் பணியை முடித்தபின்பு தலைமை ஆசிரியராக உயர்த்தப்பட்டு 1958-1966வரை, எட்டாண்டுகள், இரணைப்பாலை றோ. க. பாடசாலையின் கல்வி வளர்ச்சிக்குக் கடுமையாக உழைத்தார். அப்போது பங்குத்தந்தையாக இருந்த அமலமரித்தியாகியான அருட்பணி பாவிலுப்பிள்ளை சுவாமிகளுக்குப் பேருதவியாக இருந்து, இரணைப்பாலைக் கிராமத்தின் விசுவாச, சமூக, கல்வி வளர்ச்சிக்கு அர்ப்பணிப்போடு பணிபுரிந்தார்.

இரணைப்பாலையில் எட்டாண்டு கால கல்விச் சேவைக்குப் பின்பு, 1966இல் அளம்பில் றோமன் கத்தோலிக்கப் பாடசாலைக்கு மாற்றலாகி தலைமை ஆசிரியப் பொறுப்பை ஏற்றார். இரண்டாண்டு சேவைக்குப் பின்பு, மீண்டும் இரணைப்பாலைக்கு மாற்றலாகி 1968-1976வரை, எட்டாண்டுகள் தனது பணியை இரணைப்பாலையில் அர்ப்பணிப்போடு மேற்கொண்டார். பதினாறு ஆண்டுகள் இரணைப்பாலைக் கிராமத்தின் தலைமை ஆசிரியராகக் கடமையாற்றிய பெருமை இவரைச் சாரும்.

1976 இல் அம்பலவன் பொக்கணை - அரச தமிழ் கலவன் பாடசாலையின் தலைமை ஆசிரியராகக் கடமையாற்றி இரண்டாண்டு சேவையின் பின்பு அதிபராகத் தரம் உயர்த்தப்பட்டு, 1978-1987வரை, ஒன்பதாண்டுகள் புதுக்குடியிருப்பு றோ. க. த. பாடசாலையின் அதிபரானார். விசுவாச வாழ்விலும், கல்வி வளர்ச்சியிலும் புதுக்குடியிருப்பு மக்களின் வாழ்வில் இரண்டறக் கலந்தார். தன் குடும்பத்தையும், தான் வாழ்ந்த கிராமத்தையும், தான் பணிபுரிந்த பாடசாலை

அருட்பணி. செ. அன்புராசா அமதி

களையும் புனிதத் தலங்களாகக் கருதி வாழ்ந்திருக்கிறார், பணியாற்றியிருக்கிறார்.

கற்றுக்கொண்ட, பெற்றுக்கொண்ட நற் பண்புகள்

நேரம் தவறாமை, கடமையுணர்வு, ஒழுக்கமான வாழ்வு, விசுவாசம் நிறைந்த மனப்பாங்கு, அனைவரையும் மதிக்கும் பண்பு, மிகுந்த பொறுமை, அதிகாரிகள் அருட்பணியாளர்கள் மட்டில் மிகுந்த மரியாதை, அடக்கமான பேச்சு(அதிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட வார்த்தைகள் மட்டுமே அவரால் உச்சரிக்கப்படும்), ஆடம்பரமில்லாத வாழ்க்கை போன்றவை இவரின் தனிப்பட்ட வாழ்விலும் பணிவாழ்விலும் இவரின் பலநூறு மாணவர்கள் கற்றுக் கொண்ட - பெற்றுக்கொண்ட நற்பண்புகளாகும்.

ஆற்றிய மறைப்பணி

கல்வி வளர்ச்சியில் மட்டுமல்ல, தான் பெற்ற விசுவாச வாழ்வை பாடசாலையி

லும் பங்குத்தளங்களிலும் பகிர்ந்து வாழ்ந்தார். இதனால், மாத்தளனில் பீடப்பணியாளராக, திருப்பலிப் பண்டக் காப்பாளராக, திருப்பலிக்கு ஆர்மோனியம் இசைப்பவராக, பாடகர் குழாமை வழி நடத்துபவராகத் திகழ்ந்தார். அருட்பணியாளர்கள், துறவியர்கள் மட்டில் வயது வித்தியாசம், அனுபவம், ஆளுமைப் பண்புகள் என்ற அளவுகோல்களை வைத்துப் பார்க்காமல், அவர்கள் யாராக இருப்பினும் விசேட அன்பும் அக்கறையும் மரியாதையும் உடையவராகவும், அவர்களுக்குப் பக்கபலமாகவும் இருந்தார் என்பதற்குப் பல அருட்பணியாளரும் துறவியரும் இன்றும் சான்று பகர்வர்.

செய்த சமூகப்பணி

மாத்தளன், இரணைப்பாலைக் கிராமங்களின் முதல் ஆசிரியர் என்ற பெருமையைப் பெற்றவர் எங்கள் அன்புக்குரிய

நீத்தார் நயப்புரை:

ஆசிரியர் தே. தொம்மையப்பு ஆவார். எனவே, சமூகக் கடமைகளின் மட்டில் மிக ஆர்வத்தோடு செயற்பட்டார். அதனால், மனமகிழ்வோடு சமூகப்பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். 2000ஆம் ஆண்டு இக்கிராமத்தின் வளர்ச்சி கருதி மிகப் பெறுமதியான தன் காணியை இரணைப்பாலைக் கிராமத்திற்கு நன்கொடையாகக் கொடுத்தார். தன் குடும்பத்தைப்போல் தன் கிராமத்தையும் நேசித்தார் என்பதற்கு மேற்சொன்ன செயல் சிறியதோர் உதாரணமே!

புரிந்த அரசியற்பணி

தலைசிறந்த ஆசிரியராக தமிழ்மொழியை நேசித்த இவர், தமிழ் மண்ணையும் நேசித்தார். கட்சி அரசியலுக்கு அப்பால், இவரின் பேச்சும் மூச்சும் தமிழ்மக்களின் விடுதலையைச் சார்ந்தே இருந்திருக்கிறது.

அன்பான குடும்ப வாழ்வு

1955ஆம் ஆண்டு ஆவணித்திங்கள் 03ஆம் திகதி மாத்தளன் புனித ஆரோக்கிய அன்னை ஆலயத்தில் அமல மரித்தியாகியாகிய அருட்தந்தை ம. கறோவ் அடிகளாரின் முன்னிலையில் செபஸ்தியாம் பிள்ளை ஞானம்மாவை திருமணம் செய்து கொண்டார். அன்ரனற் டெய்சி, அருட்தந்தையேசுதாசன் (சந்திரன்), ஜெறாட், றெஜினா சகாயரதி, வில்பிறட் மரியதாசன், யூட் சூசைதாசன் ஆகிய 06 அருமையான பிள்ளைகளைப் பெற்றெடுத்தார். இவர், தன் மனைவியையும் பிள்ளைகளையும் தன் பாசக் கரங்களால் வாழ்நாள் முழுவதும் அணைத்துவைத்து அன்புள்ள கணவனாக பொறுப்புள்ள தந்தையாக வழிநடத்தியிருக்கிறார் என்பது பெரும் ஆசீர்வாதமே! 1961-2007 வரை, 47 ஆண்டுகள் இடம்பெயராது தன் சொந்த வீட்டில் இவர் வாழ்ந்து வந்தது, இறைவன் இவருக்கு வழங்கிய நிறையருள்.

நிறைவாக வாழ்ந்து நிறைவோடு செல்கிறார்

இவரின் இறுதிக்காலத்தில், மிகவும் சுகவீனமுற்று இருப்பினும் தன்னுடைய துன்பங்களை புன்முறுவலாக வெளிப்படுத்தி, தன்னுடைய முதுமைக்காலத்தில் ஏற்பட்ட நோய், இயலாமைகளை கடவுளின் திருவுளமாக ஏற்று, மகிழ்வோடும் அமைதியோடும் பொறுமையோடும் நம்பிக்கையோடும் இறுதிவரை நிறைவான வாழ்வு வாழ்ந்தார். இறைபதம் அடைவதற்கு முந்திய நாள் அருள்தந்தை ஞா. பிலேந்திரன் அடிகளாரினால் நோயிற்பூசுதல் திருவருட்சாதனத்தைப் பெற்றார். ஒளியாம் இறைவனிடம் சென்று சேரவேண்டும் என்ற தன் நம்பிக்கையின் எதிர்நோக்கை, மறுநாள் திருக்காட்சி விழா அன்று, அடையும் பேற்றினைப் பெற்றார். இவரின் ஆன்மா ஆண்டவனில் இளைப்பாறுவதாக.

திருவிழா: சும்மா அந்த மாதிரி

"அடடே, கதிரை, விசிறி எல்லாம் புதுசுமாதிரி இருக்கு"

"ஓம்.... இனி திருவிழாக் காலந்தானே. இந்தச் சாட்டோட வாங்கினாத்தான் ஒருமாதிரிச் சமாளிக்கலாம்" என விளக்கம் சொன்னார், இளந்திருத்துநர். கைத்தொலை பேசி வந்ததன் பிறகு, 'கடையில சனமா?, இன்னும் எவ்வளவு நேரத்தில வரலாம்?' என விசாரித்துவிட்டே திருத்தகம் போவதை வழக்கமாக்கிக் கொண்டேன்.

"எப்பிடி போனகிழமைத் திருவிழா?, நல்ல விசேசமா இருந்திது என்ன?" என புருவமுயர்த்தினார். "நிறைஞ்ச சனம். களர் களரா லயிட்டென்ன?, சோடிணையென்ன?, முடியவிட்டு சீனவெடியென்ன?, சும்மா அந்த மாதிரி. நீங்க வரயில்லையா?" எனத் தொடர்ந்தார்.

'திருவிழாக்களில் வெளிச்சத்தின் அளவு, சோடணையின் அழகு, வெடியின் சத்தம், ஒலிபெருக்கிகளின் அலறல் கூடுதலாக இருந்தால் ; தெய்வங்கள் கொடுக்கும் வரத்தின் அளவும் கூடுதலாக இருக்குமா?' என குசும்புக் கேள்வியொன்றை முன்வைத்தேன்.

இல்ல, அப்பிடியெண்டில்ல. ஆனால், அதெல்லாம் ஒரு ; சந்தோசந்தானே" என நடைமுறையைச் சொன்னார்.

சந்தோசம்தான், தேவையானதும்தான். ஆனால், அதுவே தாறுமாறாக எல்லை மீறிப்போகும்போது விமரிசிக்கப்பட வேண்டியதும்கூட. அடுப்பே எரியாத வீடுகள் இங்கு அநேகம் இருக்க, லட்ச ரூபாய்களை சீனவெடியில் கரியாக்குகின்ற திருவிழாக்கள் விமரிசிக்கப்படக் கூடாதா? அது இரண்டாயிரமாம் ஆண்டு. சித்திரையில் ஆனையிறவுச் சண்டையினால் இடம்பெயர்ந்தவர்கள் தங்கியிருந்த

முள்ளுக்கம்பி வேலிகளுக்குப் பின்னால் ஒட்டிய வயிறுகளுடன் கையேந்தும் நம் பிள்ளைகளைக் கவனிப்பதற்கும், பொத்தல் கூரை ஓலைக் குடிசைகளை வேய்ந்து கொடுப்பதற்கும் வெளிநாட்டுத் தொண்டுநிறுவனங்கள் வந்தேயாக வேண்டுமா?

பாடசாலைக்கு அருகில் ஒரு கோயில் திருவிழா, கிடாரக் கணக்கில் 'நேத்திக் கஞ்சி'.

"ஒண்டுரெண்டு கிடாரத்தை முள்ளுக் கம்பிக்கு அங்கால, பள்ளிக்கூடத்துக்குள்ள கொண்டுபோய்க் குடுங்க" எனச் சொன்னேன்.

"இல்ல, வருசா வருசம் இங்க வைச்சுக் குடுக்கிறது தான் வழக்கம் என 'பெருசொன்று குரலுயர்த்தியது. நானும் பிடிவாதமாக, "பாவம், அங்கால பிள்ளைகள் வாய் பாக்குதுகள்" என்றேன். அவர்கள் முறைத்தார்கள். நறுக்கென்று.....

"என்ன செய்யவேணுமெண்டு எங்களுக்குத் தெரியும், நீங்க சும்மா இருங்க" என நாலைந்து பேர் சேர்ந்து விட்டார்கள். அடிதாங்க எனக்குத் தெம்பில் லாததினால் இடம்விட்டு நகர்ந்தேன் கோழையாக, ஏழைகளின் பசியாற்றாத அது, நேர்த்திக் கஞ்சியா அல்லது சாபக் கஞ்சியா? நம் 'வருசா வருச வாடிக்கையைக்' காப்பாற்றிக் கொள்ள மனிதனைப் பலி யிடவும் நமக்கு மதங்கள் சொல்லித்தருகின்றனவா? வண்ணமாய் வெடிப்பதற்குப் பட்டாசும், மலர் தூவுவதற்கு வானூர்தியும் என்ன, நம் 'வருசா வருசப் பாரம்பரியமா'? புதுமைகள் வந்து சேருவது பாவமென்றால், இங்கு ஒலிபெருக்கிகளும் ஒளிரும் மின்விளக்குகளும் நுழைந்திருக்கக் கூடாதே! அவங்கட கோயில் திருவிழாவைவிட, நம்மட திருவிழா நம்பர் வன் ஆக இருக்கவேணும் - இதுதான் நம் இயக்க மந்திரமா? இந்த வருசம் சிறப்பா இருந்திது, நல்ல சோடிணை, ஞாயமான சனம், பெருந்தொகைக் கடைகள் - இவைதான் நம் ஆன்மீகத்தின் அளவுகோலா? மத,சமூக நிறுவனங்களும் இந்த வாடிக்கைச் சம்பிரதாயங்களைக் கண்டுகொள்ளாமல் இருந்தால் அது குருட்டுப் பக்தியையே பிரசவிக்கும்.

அருட்பணி.போல் ஜெயந்தன் பச்சேக்

முள்ளுக்கம்பி வேலிகளுக்குப் பின்னால் ஒட்டிய வயிறுகளுடன் கையேந்தும் நம் பிள்ளைகளைக் கவனிப்பதற்கும், பொத்தல் கூரை ஓலைக் குடிசைகளை வேய்ந்து கொடுப்பதற்கும் வெளிநாட்டுத் தொண்டுநிறுவனங்கள் (NGOs) வந்தேயாக வேண்டுமா?

வெள்ளைக்காரன் கோயிலுக்குப் போகத் தயங்குவான். ஆனால் தொண்டு நிறுவனங்களைத் தாங்குவான். நாமோ கோயிலுக்குப் போவோம், குதூகலமாய்க் கொண்டாடுவோம். எம் ஆலய முன்றல்களில் ஆரவார மாய்த் திருவிழாக்கள் நடைபெறும், அட்டகாசமாய்ப் பட்டாசுகள் வெடிக்கும், வழிபாடுகள் சிறப்பாய், வெகு சிறப்பாய் நடந்தேறும், பாவும் பாலும், பூவும் பொருளும் நம் பீடங்களையும் தேர்களையும் நிறைத்து நிற்கும். அவ்வளவே!

ஒருவேளை நம் தெய்வங்கள் தம் தேர்களையும் பீடங்களையும் விட்டிறங்கி நாம் சுற்றும்பிரகாரம் தொடங்குமுன்பாகவே, விழுந்து கிடக்கும் மானுடம்தேடி 'தம்பாட்டுக்கு' நகர்வலம் போய்விடுமோ? அவை எம் வழிபாட்டு ஆரவாரமும் ஆர்ப்பாட்டமும் தவிர்த்து, அழுதுவிம்மி ஆராய்ச்சிமணி நாடும் அபலைதேடி அவசரமாய ஆலயம் பிரிந்திடுமோ?

முன்னுரை

சென்ற வார காவலன் வார ஏட்டில் பொங்கலோ பொங்கல் என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வரைந்திருந்தேன் அந்தக் கட்டுரையுடன் ஒரு படமும் பிரசுரமாகி இருந்தது. அந்தப்படத்தில் மண்பானை யொன்றில் பால் பொங்கி வழிவதையும் அதன் முன்னால் யாழ்.ஆயர் அவர்கள் ஆசீர்வதிப்பதையும் பார்க்கலாம். கட்டுரை முடிவில் இது தமிழர் விழாவாகிய பொங் கல் விழா அல்ல என்று எழுதியிருந்தது இதன் விளக்கத்தை அடுத்த காவலன் ஏட்டில் எதிர்பாருங்கள் என்றும் எழுதியி ருந்தது. அன்று நடந்த நிகழ்வில் பங்கு கொண்டோர் படத்தையும் நிகழ் வையும் அடையாளம் கண்டிருக்கலாம்.

இந்த நிகழ்வு எங்கு நடந்தது? ஏன் நடந்தது என்று வாசக அன்பர்கள் கேட் பதில் நியாயம் உண்டு.

" ஞானவழி " திறப்பு விழா

சென்ற ஆண்டு புரட்டாசித் திங்கள் 5ம் நாள் அமலமரித்தியாகிகள் சபையின் யாழ் மாகாணத்துக்குச் சொந்தமான சங்கமம் வளாகத்தில் ஒரு சிறிய புதுவீடு கட்டப்பட்டு அன்றைய தினத் தில் தமிழர் பண்பாட்டைப் பின்பற்றி புதிய பானையில் பால் விட்டுப் பொங்கி அந்த வீட்டை யாழ் ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை சீர்வதிக்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட் டது. அதேவேளை ஏற்கனவே கட்டப் பட்ட நிலையில் இருந்த ஐந்து சிறு மனைகளும் புதுப்பிக்கப்பட்டு ஒவ்வொரு மனையிலும் நான்கு அறைகள் அமைத்து அவையும் வெவ்வேறு குருக்களால் ஆசீர்வதிக்கப்பட்டுத் திறந்து வைக்கப் பட் டன.

யாழ் ஆயரின் உரையிலிருந்து...

இம் மனைகள் ஆசீர்வதிக்கப்பட்ட பின் அழைக்கப்பட்டோர் சங்கம வளாகத்தில் பழைய மண்டபத்தில் ஒன்று கூடினோம் அப்பொழுது விருந்தினர் அனைவருக்கும் பாலும் கற்கண்டும் வழங்கப்பட்டன. அக் கூட்டத்தில் யாழ் ஆயர் உரை வழங்கி னார். அவரது உரையின் சாரம் இந்த மறை மாவட்டத்தில் ஆன்மீகப்பணியொன்றை அமலமரித்தியாகிகள் செய்யவேண்டு மென்று பல தடவைகள் தான் யாழ் மாகாண அமலமரித்தியாகிகளின் முதல் வரைக் கேட்டதாகச் சொன்னார். அந்தக் கனவு இன்று நிறைவேற ஆரம்பித்துள் ளது என்றுரைத்து அமலமரித்தியாகிக ளின் இந்த முயற்சியைப் பாராட்டி வாழ்த் தியதோடு தனது ஒத்துழைப்பைத் தருவ தாகவும் கூறினார். முடிவில் இந்த ஆன்மீக நிலையம் யாழ் மறைமாவட்டத்தில் அமைந்திருந்தாலும் இந்தப்பணி இந் நாட்டு மக்கள் அனைவருக்கும் அதாவது தேசிய மட்டத்தில் அமைய வேண்டு மென்று வாழ்த்தினார்.

யாழ் மாகாண அமலமரித்தியாகி களின் முதல்வரின் உரையிலிருந்து...

யாழ் ஆயர் அவர்களுடைய உரையைத் தொடர்ந்து உரையாற்றிய யாழ் மாகாண அமலமரித்தியாகிகளின் முதல்வர் அருட்திரு எட்வின் வசந்தராஜா அடிகள், இன்னுமோர் படி கடந்து "ஞான வழி" யில் இடம்பெறும் பணி தேசிய மட்டத்தில் மட்டுமல்ல அதையும் கடந்து அனைத்துலக அதுவும் சிறப்பாக ஆசிய

நாடுகளுக்கும் விரியும் என்று கூறினார். என்ன இவர் மிகைப்படக் கூறுகிறாரா? என்று பலரும் எண்ணுவார்கள். அந்த எண்ணத்தில் நியாயம் உண்டு.

AORC (Asia Oceania Regional Conference)

வருகிற பங்குனி மாதம் தொடக்கத்தில் ஆசிய அவுஸ்ரேலிய நாடுகளில் உள்ள அமலமரித்தியாகிகளின் மாகாண முதல் வர்கள் தாங்கள் ஆண்டுதோறும் நடத்தும் மாநாட்டை இம்முறை ஞான வழியில் நடத்துவதாகத் தீர்மானித்துள்ளார்கள். யாழ் மறைமாவட்டத்தில் இப்படிப்பட்ட ஒரு மாநாடு நடைபெறுவது அரிது. ஞான வழி இதை முன்னின்று நடத்தும் இம் மாநாட்டின் கருப்பொருள் "ஆசியச் சூழலில் வெவ்வேறு கலாசாரங்களிடையே இடம் பெறும் உருவாக்கத்தில் (formation) வரக்கூடிய சவால்கள் அருமையான தலைப்பு இதையிட்டுப் பின்னர் விரிவாக எழுதுவோம் காவலன் வாசகர்களோடு எங்கள் சிந்தனையைப் பகிர்ந்து கொள் வோம். தமிழ் மறைமாவட்டங்களில் உள்ள வாசகர்கள் இக் கருத்துப் பரிமாறலில் பங்கு கொள்ளலாம் காவலன் அதற்குக் களம் அமைத்துத் தரும் என்று எதிர் பார்க்கின்றோம் ஞானவழிக்கு பொறுப் பேற்றுள்ள செல்வரட்ணம் அ.ம.தி திறப்பு விழா அன்றுநடைபெற்றகூட்டத்தில் "ஞான வழி" யில் நிகழ்வுகள் பற்றி ஒரு சிறு உரையாற்றினார். அந்த உரையில் விரிவான ஒரு வடிவத்தை இங்கு எழுதி தமிழ் பேசும் மக்களின் ஒத்துழைப்பை வேண்டி நிற்கின்றோம் ஆங்கில ஏடாகிய (The Messenger) வாயிலாக சிங்களம் பேசும் கத்தோலிக்க மக்களை யும் இங்கு அழைப்போம்.

" ஞான வழி "

இது ஒரு அகம் அதாவது வீடு வீடு அன்றேல் அகம் தமிழில் பொருள் செறிந்த ஒரு சொல் வீடு வருவது தான் ஒரு பிளவை உருவாக்கி நானே என்னில் இருந்து பிரிந்து புறத்தில் வெகுதூரம் சென்று விட்டேன் இந்தப்புறத்தில் சென்ற நான் என்னுடைய அடையாளத்தைப் (Identity) புறத்தில் உருவாக்கி இதுதான் என்ற ஒரு மாயையை உருவாக்கி விடு கின்றேன் இதையே ஒரு பொய்யான நான் (false self) என்று நான் இந்தப் பொய்யான நான் அன்ற அடையாளத்தை உணர்கினறேனோ அதாவது தன்னுடைய (self awarenes) உணர்ந்து அந்தப் உணர்வில் என்னை அறிந்து (தன்னறிவு self-) பெறுகின்றேனோ அன்று தான் எனது மனமாற்றம் (conversion) ஆரம் பிக்கும் இந்த மனமாற்றம் ஒரு தொடர் மனமாந்நம் (ongoing conversion) இரண்டாவது வத்திகான் சங்கத்தின் பின் னர் குருத்துவ துறவற வாழ்க்கையை புதுப்பிக்க அழைக்கப்பட்ட பொழுது இந்த மற்றத்தைப்பற்றி நாம் பேசவும் எழுதவும் முனைந்தோம். இந்தத் தொடர் மனமாற்றத் தையே தொடர் உருவாக்கம் என்று அழைக்கின்றோம் (ongoing formation) ஆகவே தொடர் உருவாக்கத்தில் ஓர் அகப்பயணம் அதாவது எந்த வீட்டில் இருந்து நான் பிரிந்து விலகி விடப் போனேனோ அங்கிருந்து திரும்பி ஓர் அகப்பயணத்தில் 'வீடு' நோக்கி வரும் அகப்பயணத்தில் ஆன்மீகம் உண்டு. இவ் விடத்தே ஒரு முக்கியமான விடயத்தை வலியுறுத்த விரும்புகின்றேன் மொட்டு விரிந்து முகிழ்து வெளிவரும் புதிய ஆன் மீகத்தின் அடிப்படையில் தன்னுணர்வும் தன்னறிவும் முன்னைய காலத்தில் இவற்றை நாம் பெரிதாகக் கவனத்தில் கொள்ளவில்லை.

குழப்பம்

ஒரு சிலர் இந்தத் தொடர் உரு வாக்கத்தையும் தொடர் கல்வியையும் (Continued education) இணைத்தே பார்க்கிறார்கள் இரண்டிற்கும் உரிய வேறுபாட்டை அடையாளம் காணாது உயர்கல்வியை நாடுவதும் தொடர் உரு வாக்கம் என்று கணிக்கிறார்கள் உயர் கல்வியில் (கல்வித்துறையைப்பொறுத்தது) கல்வி முறையை பொறுத்தது) ஒரு தொடர் உருவாக்கத்திற்குத் துணை செய்யலாம் ஆனால் தொடர் உருக்கத்திற்குத் துணை செய்யலாம் ஆனால் தொடர் உருவாக்க மும் தொடர்கல்வியும் ஒன்றல்ல இதில் தெளிவு அவசியம். (வளரும்...)

உயர்ந்தவற்றை அடைவது எப்படி?

சான் பிரான்சிஸ்கோவின் கலிபோர்னியா பல்கலைக் கழகத்தில் மருத்துவபீட பேராசிரியராகப் பணிபுரியும் சார்ள்ஸ் கார்பீல்ட் என்பவர் பல்வேறு வாழ்க்கைத் துறையிலிருந்து சாதனைபடைத்த 1500 பேருடன் ஓர் ஆய்வு நடத்தியுள்ளார். அதனடிப்படை யில் சில பொதுவான தோற்றக்கூறுகளைக் கண்டு பிடித்துள்ளார். அவற்றை எவரும் கடைப்பிடிக்கலாம். இதோ! கார்பீல்டுடைய ஆய்விலிருந்து சாதனைபடைத்தவராக நீங்கள் மாற நாம் தரும் படிமுறைகள்..

1. முழுமையான வாழ்வை வாழுங்கள்:

உயர்ந்த இலட்சியங்களை அடைந்தவர்கள் கடின உழைப்பாளிகள் - ஆனால் குறித்த வரையறைக்குள் வேலை செய்பவர்கள். வேலைதான் எல்லாம் என்றி ருப்பவர்களல்ல. அவர்களுக்கு ஓய்வெடுக்கத் தெரியும். தமது காரியாலயத்தில் வேலை செய்வதுமாத்திர மல்ல தமது பிள்ளைகள், நண்பர்களோடு ஓய்வெடுப் பதும் முக்கியமெனக் கருதுபவர்கள்.

2. உமக்கு நிறைவு தரும் வேலையைச் செய்யும்:

கார்பீல்டின் தரவின்படி உயர்ந்த சாதனையாளர் தமக்கு உண்மையில் விருப்பமான வேலையையே தெரிவுசெய்கிறார்கள். அத்தோடு தமது வேலை நேரத் தில் 2/3 பகுதியை விருப்பமான வேலையிலும் 1/3 பகுதியையே விருப்பமில்லாத வேலையிலும் செலவிடு கிறார்கள். அவர்களுக்கு வெளிச்சன்மானங்களான பதவி உயர்வு, அதிகாரம் என்பவற்றைவிட பணியின் உள்ளார்ந்த திருப்தியே முக்கியம். அவர்கள் தாம் விரும்பிய வேலை-யைச் செய்வதால் அவ்வேலையின் தரம் நல்லதாகவும் பயன்பாடு உயர்ந்ததாகவும் இருக்கிறது. ; - சவாலாக அமையக்கூடிய பணிகளை மனதுக்குள்ளே ஒத்திகை செய்துபாரும்:

ஏறக்குறைய எம்மில் எல்லோருமே எமது வாழ்வின் முக்கிய நிகழ்வுகள் பற்றிக் கனவு காணுகின்றோம். வெறும் பகற்கனவுக்கும் தெளிவாக மனத்தால் வேலை செய்து பார்ப்பதற்கும் வித்தியாசம் உண்டு. சீனப்புரட்சியின்போது ஏழு வருடங்கள் சிறைவாசம் அனுபவித்த ஒரு இசைக்கலைஞர் சிறையிலிருந்து மீண்டவுடன் அழகாக இசைக்கருவியை மீட்டினார். ஏனென்றால் "ஒவ்வொருநாளும் மனதுக்குள் அதைப் பயிற்சி செய்தேன்" என்று கூறினார்.

3. முழு நிறைவையல்ல முயற்சியின் பலனைத் தேடும்:

பேராசைபிடித்த கடின உழைப்பாளிகள் பலர் முழு நிறைவைக் காணவேண்டுமென்று அதீத முயற்சி யெடுத்து சொற்ப பலனையே காணுகின்றனர். சிறந்த சாதனையாளர் முழு நிறைவைப் பெற்றே தீரவேண்டு மென்ற வலுக்கட்டாயத்திலிருந்து விடுதலையடைந்த வர்கள். தமது தவறுகளை வீழ்ச்சியாகக் கருதாதவர் கள். தவறுகளைப் படிக்கற்களாகப் பயன்படுத்தக் கற்றுக்கொண்டவர்கள்.

4. இடரைத் துணிந்து ஏற்று செயலில் இறங்கும்:

பலர் பழக்கப்பட்டதையும் பாதுகாப்பானதையுமே தேடுகின்றனர். அது அவர்களுக்கு அலுப்பைக் கொடுத்தாலும் புதியதைத் துணிந்து செய்யப் பின்வாங்குகின்றனர். சிறந்த சாதனையாளரோ துணிந்து செயலில் இறங்குகின்றனர். ஏனென்றால், தாம் பிழைவிட்டாலும் எப்படி அதைச் சமா ளிக்கலாமென்று கவனமாகச் சீர்தூக்கிப் பார்க்கின்றனர்.

5. உமது ஆற்றலைக் குறைவாக எடை போடவேண்டாம்:

எம்மில் பலர் எமக்கு எமது வரையறைகள் தெரியுமென்று நினைக்கிறோம். அப்படி எமக்குத் தெரிந்தது உண்மையான அறிவு அல்ல, அவை எம்மைப் பற்றிய குறைவான நம்பிக்கைகள். இவைதான் நாம் சிறந்த சாதனையாளராவதற்குப் பெரும் தடைக்கற்கள். பலகால மாக 4 நிமிடத்தில் ஒரு மைல் தூரத்தை ஓடுவது முடியாத காரியம் என்று எல்லோரும் எண்ணினர். 1954ல் றோயர் பணிஸ்ரர் இந்த எண்ணத்தை முறியடித்தார். அதன் பின் சொற்பகாலத்துள் இன்னும் பத்துப்பேர் அவரைத் தொடர்ந்தனர். சிறந்த சாதனையாளர் தடை களைத் தாண்டத் தெரிந்தவர்கள்.

6. மற்றவர்களோடு அல்ல, உம்மோடு போட்டி போடும்:

சிறந்த சாதனையாளர்கள் தாம் முன்பு சாதித்தவற்றைவிட இன்னும் சிறப்பாகச் சாதிக்க வேண் டும் என்று முயற்சிப்பார்களேயொழிய மற்றவர்களைத் தோற்கடிக்கவேண்டுமென்று நினைக்கமாட்டார்கள். மற்ற வர்களுடைய ஆற்றல், திறமைகளை நினைத்துக் கவலைப்படுவதால் எம்மையே நாம் தோற்கடிக்கி றோம். உம்முடைய பழைய பழக்கங்களை மாற்றவும் புதிய ஆற்றலைப் பெற்றுக்கொள்ளவும் உமக்கு சக்தி யுண்டு. உம்முடைய ஆற்றல்களையும் வாழ்க்கைத் தரத்தையும் நீர் வளர்த்துக்கொள்ளலாம்.



திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களது "அப்பறுயிற் இல்லிஸ்" (APERUIT ILLIS) என்னும் திருத்தூது மடல் ஊடாக இறைவார்த்தை ஞாயிறை நிறுவுதல்

1. மறைநூலைப் புரிந்து கொள்ளுமாறு அவர்களுடைய மனக் கண்களைத் திறந்தார். (லூக்கா 24:45). உயிர்த்தெழுந்த ஆண்டவர் தமது விண்ணேற்பிற்கு முன்னதாகப் புரிந்த இறு திச் செயல்களில் இதுவும் ஒன்றாகும். ஒன்று கூடிய சீடர்களுக்கு இயேசு தோன்றி அவர்களுடன் அப்பத்தைப் பிட்டு இறைவார்த் தையைப் புரிந்து கொள்ளுமாறு அவர்களின் மனங்களைத் திறந்தார். அவர் அவர்களிடம் மெசியா துன்புற்று இறந்து மூன் றாம் நாள் உயிர்த்தெழ வேண்டும் என்றும் பாவமன்னிப்புப் பெற மனம் மாறுங்கள் எனவும் (லூக்கா 24: 26, 46 - 47) அவர்க ளுடைய அங்கலாய்ப்பிலும் அச்சத்தின் மத்தியிலும் பாஸ்காவின் மறைபொருளின் அர்த்தத்தை அவர் அவர்களுக்கு வெளிப்படுத் தினார். மீட்பின் மறை பொருளுக்கு சாட்சியம் பகர, வல்லமையை அளிக்கும் தூய ஆவியாரை அனுப்புவதாக அவர் வாக்களித்தார். (லூக்கா 24:49)

கிறிஸ்தவர்கள் என்னும் அடையாளத்தை நிலை நாட்ட, உயிர்த்தெழுந்த ஆண்டவருக்கும் இறை நம்பிக்கையாளர் சமூகத்திற்கும். தூய மறைநூலுக்குமிடையிலான உறவு மிகவும் இன்றியமையாதது. எமது உள்ளத்தைத் திறக்கவல்ல ஆண்டவர் அல்லாமல், மறைநூலின் ஆழத்தைப் புரிந்துகொள்வது இய லாத காரியமாகும். இருப்பினும் அதன் எதிர்மறைக்கருத்தும் உண்மையானது: மறைநூல் அல்லாமல், இயேசுவினதும் திரு- அவையினதும். இவ்வுலகத்தின் பணியின் நிகழ்வுகள் புரிந்து கொள்ள முடியாததாகவே இருக்கும். ஆக, திருவிவிலியத்தை அறியாமை கிறிஸ்துவை அறியாமை ஆகும் என புனித ஜெரோம் கோருவது பொருத்தமானதாகும். (எசாயா நூல் விளக்கவுரை - முன்னுரை 24.17 B)

2. இரக்கத்தின் சிறப்பு யூபிலி ஆண்டின் நிறைவில், ஆண்ட- வருக்கும் அவர் மக்களுக்கும் இடையில் நடைபெறும் தொடர் உரையாடலாக விளங்கும் அளவுகடந்த செல்வங்களை மதி- க்கும் இறைவார்த்தைக்கு ஒரு ஞாயிறு தினத்தை ஒதுக்கி, முழுமையாக அர்ப்பணிக்குமாறு நான் பரிந்துரை செய்தேன். (துன்பத்தில் இரக்கம் என்னும் மடல் 7) திருவழிபாட்டு ஆண்டின் ஒரு குறிப்பிட்ட ஞாயிற்றுக்கிழமையை இறைவார்த்தைக்கு அர்ப்பணிப்பது. உயிர்த்த ஆண்டவர் தமது வார்த்தையின் புதை யலை எமக்குத் திறக்கவும். இவ்வுலகின் முன்னே அளவிட முடியாத செல்வங்களைப் பறைசாற்றவும். திருஅவையைப் புத்- துணர்வுடன் அனுபவிக்க வழி சமைக்கிறது.

புனித எபிரேமின் போதனை இங்கே நமக்கு நினைவூட்டப்படுகின்றது: 'ஆண்டவரே, உமது வார்த்தை யின் ஒரு சொல்லிலாவது. அதன் முழுமையான செழுமையை யார் தான் புரிந்து கொள்ள முடியும்?' நாங்கள் நீரற்றநிலையிருந்து பருகும் மிகுந்த தாகமுடையவர்கள் போன்றவர்கள். உமது வார்த்தை அதனைக் கற்பவர்கள் கொண்டிருக்கும் பல கண் ணோட்டங்களைப் போன்று பல பரிமாணங்களைக் கொண் டுள்ளது. ஆண்டவர் தம்முடைய வார்த்தையைப் பலவர்ண அழகினால் வடிவமைத்துள்ளார். ஆதலால் அதனைக் கற்பவர்கள் தமது தூண்டுதலுக்கு ஏற்ப ஆழ்நிலையான செய்ய முடியும். அவருடைய வார்த்தையில் அனைத்து செல்வங்களை யும் புதைத்துள்ளார். அதனால் நாம் ஒவ்வொருவரும். எம் ஆழ்- நிலைத்தில் அதன் செழுமையைக் காணமுடியும். (தியாதெச- றோன் விளக்கவுரை 1.18)

இம் மடலின் மூலம், "இறைவார்த்தை ஞாயிறு தினத்தை: முழுத் திரு அவையும் ஒன்றிணைந்து கொண்டாடும் நோக்கத்தை. இறைமக்கள் என்னிடம் வெளிப்படுத்திய பல விண்ணப்பங்களுக்கு நான் பதிலளிக்க விரும்புகிறேன். கிறிஸ் தவ சமூகம் தம் அன்றாட வாழ்க்கைக்குக் கடவுளுடைய வார்த்தை எவ்வாறு முக்கியமானது என்பதைப் பற்றிச் சிந்திக்க நேரத்தை ஒதுக்குவது இப்போது மிகவும் பொதுவானது. தங்கள் நம்பிக்கையாளருக்கு மறைநூலைக் கிடைக்கக்கூடியதா- கவும். இந்த உன்னத கொடைக்கான நன்றியை அதிகரிப்ப- தற்கும், அதனது படிப்பினைகளுக்குத், தமது அன்றாட வாழ்வில் உருவகித்து சான்று பகரவும், பல்வேறு தளத் திருஅவைகள் வளமுள்ள முன்னெடுப்புக்களை மேற்கொண்டுள்ளன.

எனினும் புதிதாகப் படித்து ஏற்றுக்கொள்ளக்கூடிய தகமைவாய்ந்த ஏடாகிய 'இறைவெளிப்பாடு' என்னும் கொள் கைக் திரட்டைக் கொண்டுள்ள இரண்டாம் வத்திக்கான் சங்கம் கடவுளுடைய வார்த்தையை மீளக் கண்டுபிடிக்கப் பேர் ஆர்வ- த்தைத் தந்துள்ளது. மறைநூலின் தன்மையையும், வழி- வழியாக வழங்கப்படும் இறைவெளிபாடு (இயல் 2), அதன் இறை ஏவுதல் (இயல் 3), பழைய ஏற்பாட்டையும், புதிய ஏற்பாட் டையும் முக்கியத்துவம் அளிப்பதோடு. சிறப்பாக வழிபாட்டுச் சூழமைவில் அதன் தனித் துவமான அருளடையாளப் பண்புகளையும் முன்னுரிமைப்படுத்துகிறது.

ஆண்டவர் தனது மணமகளுடன் பேசுவதில் ஒருபோதும் சோர்- வடையாத, அவர் அன்பிலும் உண்மையுள்ள சாட்சிகளிலும் வளரும்படி, உயிருள்ள வார்த்தையுடனான இந்தத் தீர்க்கமான உறவால் எமது மக்க- ளின் வாழ்க்கை தொடர்ந்து குறிக்கப்படுவது பொருத்தமானது.

3. இதன்விளைவாக, பொதுக்காலத்தின் மூன்றாவது ஞாயிறை இறைவார்த் தைக் கொண்டாட்டம். அதனைக் கற்றல். மற்றும் அதனைப் பரப்புதல் ஆகிய வற்றிற்கு அர்ப்பணிக்கப்படும் என்று நான் அறிவிக்கிறேன். இவ் இறை வார்த்தை ஞாயிறு.

யூத மக்களுடன் எமது உறவைப் பலப்படுத்தவும். கிறிஸ்தவ ஒன்றிப் புக்காக மன்றாடவும் ஊக்குவிக்கும் காலமாக இவ்வாண்டின் பொருத்தமான காலமாக அமையும். இது காலப்போக்கில் ஒரு தற்காலிக நிகழ்விலும் மேலான தது: இறைவார்த்தை ஞாயிறு கொண்டாட்டம் திருஅவைகளுக்கிடையிலான உரையாடல் பணிகளைக் கொண்டுள்ளது. ஏனெனில் இறைவார்த்தை அதனைக் கேட்போருக்கான உண்மையான நிலையானதுமான ஒற்றுமைக் கான பாதையைச் சுட்டிக்காட்டுகிறது.

இந்த ஞாயிறு மேன்மையான கொண்டாட்டமாக அமைய வெவ்வேறு குழுக்கள் தமக்குரிய வழிகளைக் கண்டுபிடிப்பாகள். இறை வார்த்தையின் நெறிமுறை மதிப்பை இறைமக்களின் கவனத்தை ஒருமுகப் படுத்தும் நோக்கில் திருப்பலிக் கொண்டாட்டத்தின் போது. இறைவார்த்தை யைக் கொலு ஏற்றவேண்டியது மிக முக்கியமானதாகும்.

இந்த ஞாயிறில் இறைவார்த்தையின் அறிவிப்பை முதன்மைப் படுத்துவதும் மறையுரையில் அதற்குச் செலுத்த வேண்டிய முறையான மதிப்பை வலியுறுத்துவது மிகப் பொருத்தமானது. வழிபாட்டில் இறை வார்த்தை அறிவிப்பின் முக்கியத்துவத்தை வெளிக்கொணரும் நோக்கத் தோடு. ஆயர்கள் வாசகர்களை அல்லது அதற்கு நிகரானவர்களை ஏற்படுத்- தும் சடங்கினை நிறைவேற்றலாம்.

இது சம்பந்தமாக, பீடத்துணையாளஉகள் மற்றும் நற்கருணைப் பணியாளர்களுக்குப் பயிற்சியளிப்பது ஏற்கனவே நடைமுறையில் இருப்பது போல. நம்பிக்கையாளருக்கு. இறை வார்த்தையைத் தகுதியாக எடுத்துரைப் போரைப் பயிற்றுவிப்பது தேவையான பயிற்சி அளிப்பது போன்ற காத்திர- மான முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும்.

எங்ஙனம் இறைவாஉத்தையை வாசிப்பது என்பதைக் கற்றுக் கொள் ளல். அதற்கு மதிப்பளித்தல் அதன் தணையோடு தினமும் செபித்தல் குறிப் பாக 'இறைதியான வாசிப்பின்: மூலம் செபித்தல் போன்றவற்றிக்கு முக்க- யித் துவத்தைக் கொடுக்கும் வகையில் மேய்ப்பர்கள் திருவிவிலியத் தையோ அல்லது அதன் ஒரு நூலையோ முழு இறைமக்களுக்கும் கொடுப்பதற்கான வழியைக் கண்டுபிடிக்கலாம்.

4. பாபிலோனிய நாடுகடத்தலுக்குப் பிறகு இஸ்ரேல் மக்கள் தங்கள் தாய் நாட்டிற்குத் திரும்பியமை எண்ணிக்கை நூலைப் பகிரங்கமாக வாசிப்பதன் மூலம் கோடிட்டுக் காட்டப்பட்டது. நெகேமியா நூலில் அந்த நிகழ்வு உணர்வு பூர்வமான தெளிவான விளக்கத்தை நமக்குத் தருகிறது. சட்ட நூலுக்கு செவிமடுப்பதற்காக மக்கள் எருசலேமில் நீர் வாயிலுக்கு முன்னே அமைந்- திருந்த வளாகத்தில் ஒன்று கூடினார்கள். அவர்கள் நாடு கடத்தப்பட்டு சித துண்டிருந்தார்கள். ஆனால் இப்போது அவர்கள் திரு விவிலியத்தைக் சூழ்ந்து 'ஒன்றாகத்' தாங்கள் கூடிவந்ததைக் கண்டார்கள் (நெகேமியா 8: 1). வேத நூலை வாசிப்பதற்கு மக்கள் 'உன்னிப்பாகச் செவி மடுத்தார்கள்: (நெகேமியா 8:3). அதன் வார்த்தைகளில் அவர்கள் வாழ்ந்த அனுபவத்தின் அர்த்தத் தைக் கண்டுபிடிப்பார்கள் என்பதை உணர்ந்தார்கள். அவ் எடுத்துரைப்பிற்கான பிரதிபலன் மிகுந்த உணர்ச்சியையும் கண்ணீரையும் கொண்டிருந்தது.: 'லேவியர்கள்' வேத நூலில் இருந்தும் இறைச் சட்டத்திலிருந்தும் தெளிவாக வாசித்தார்கள். அவர்கள் வாசிப்பைப் புரிந்துகொள்வதற்காக அவர்கள் விளக்- கத்தைக் கொடுத்தார்கள்.

ஆளுநர் நெகேமியாவும் குருவும் திருநூல் வல்லுனருமான எஸ்ராவும் மக்களுக்கு விளக்கம் கூறிய லேவியர்களும் மக்கள் அனை- வரையும் நோக்கி 'இன்று கடவுளாகிய ஆண்டவரின் புனித நாள்: எனவே நீங்கள் அழுது புலம்ப வேண்டாம்' என்றனர். ஏனெனில் மக்கள் அனைவரும் திருச்சட்டத்தின் சொற்களைக் கேட்டதில் இருந்து அழுது கொண்டிருந்தார்கள். அவர் அவர்களைப் பார்த்து 'நீங்கள் போய் கொழுத்தவற்றை உண்டு இனிமையான திராட்சை இரசத்தைக் குடியுங்கள். எதுவும் தயார் செய்யாதவருக்குச் சிறிது அனுப்பி வையுங்கள். ஏனெனிறால் நம் ஆண்டவரின் புனித நாள் இதுவே எனவே வருந்த வேண்டாம். ஏனெனி றால் ஆண்டவரின் மகிழ்வே உங்கள் வலிமை' (நெகேமியா 8: 8-10).

இவ் வார்த்தைகள் ஒரு சிறந்த படிப்பினையைக் கொண்டுள்ளன. வேதநூல் ஒரு சிலரின் பரம்பரைச் சொத்தாக மட்டும் இருக்க முடியாது. அதிலும் குறைவாக நூல் தொகுப்பு சலுகை பெற்ற ஒரு சிலரின் நலனுக் காகவும் இருக்கமுடியாது. எல்லாவற்றிற்கும் மேலாக அதன் செய்தி

5. கேட்பதன் மூலம் பிறந்த இந்த ஒற்றுமையில் திரு விவிலியத்தை விளக் குவதற்கும் அதைப் புரிந்துகொள்ள அனைவருக்கும் உதவுவதற்கும் மேய்ப்பர்கள் முதன்மையான பொறுப்பாவார்கள். இது மக்களின் புத்தகம் என்பதால் இந்த வார்த்தையின் பணியாளர்களாக அழைக்கப்பட்டவர்கள் அதைத் தங்கள் சமூகத்திற்குப் பகிர்ந்தளிப்பதற்கான அவசரத் தேவையை உணர வேண்டும். மறையுரை குறிப்பாக ஒரு தனித்துவமான செயற் பாட்டைக் கொண்டுள்ளது. ஏனெனில் அது 'ஒரு பகுதி சடங்கு இயல்பைக் (Evangeli Gaudium 142) கொண்டுள்ளது. எளிமையான மற்றும் பொருத்தமான மொழியின் மூலம் கடவுளுடைய வார்த்தையில் இன்னும் ஆழமாக நுழைய மக்களுக்கு உதவுவது. 'நல்லதைக் கடைப்பிடிப் பதை ஊக்குவிக்க இறைவன் பயன்படுத்திய உருவங்களின் அழகைக்' குருக்கள் தாமே கண்டறிய வழிசமைக்கும். இது வீணடிக்கக்கூடாத ஒரு மேய்ப்புப்பணி வாய்ப்பாகும்.

கடவுளின் வார்த்தையின் அழகைப் பற்றிக் கொள்ளவும் அதைத் தங்களின் வாழ்க்கையில் கடைப்பிடிப்பதற்கும் எமது இறைமக்கள் பலருக்கு இதுவே ஒரே ஒரு வாய்ப்பாகும். இதன் விளைவாக மறை உரையை ஆயத்தம் செய்வதற்குப் போதுமான நேரம் ஒதுக்கப்பட வேண்டும். திரு- வாசகங்களின் விளக்கவுரைகளை மேம்படுத்த இயலாது. மறை உரை ஞ்களாகிய நாம் நீண்ட பகட்டான மறை உரைகளை ஆற்றவோ அன் றேல் தொடர்பில்லாத தலைப்புகளில் அலையவோ கூடாது.

புனித வாசகங்களைப் பற்றிச் செபிக்கவும் தியானிக்கவும் நாம் நேரம் எடுக்கும்போது நாம் இதயத்திலிருந்து பேசலாம். இவ்வாறு அத்- தியாவசியமானவை மற்றும் பலனைத் தரக்கூடியற்றை வழங்குவ- தன் ஊடாக நமக்குச் செவி மடுப்பவர்களின் இதயங்களைத் தொடலாம். இறைவார்த்தைக்கு நேரத்தையும் ஜெபத்தையும் அர்ப்பணிப்பதில் நாம் ஒருபோதும் சோர்வடையக்கூடாது. இதனால் அது 'ஒரு மனித வார்த் தையாக அல்லாமல் அது உண்மையில் கடவுளுடைய வார்த்தையாக' பெறப்படும் (1 தெசலோனிக்கேயர் 2:13).

மறையாசிரியர்களும் மக்களை அவர்களது இறை நம்பிக்கை யில் வளர உதவும் பணியில் திரு விவிலியத்தைப் பழக்கப்படுத்தில் கொள் வதன் மூலமும் அதனைப் படிப்பதன் மூலமும் தனிப்பட்ட புதுப்பித்தலுக் கான அவசரத் தேவையை உணர வேண்டும். இது இறை வார்த்தை யுடன் ஒரு உண்மையான உரையாடலை அதைக் கேட்பவர்களிடையே வளர்க்க உதவும்.

6. மூடிய கதவுகளுக்குப் பின்னால் கூடியிருந்த தம்முடைய சீடர்களைச் சந்திப்பதற்கு முன்பு மறைநூல்களைப் புரிந்துகொள்ளுமாறு அவர்களது மனங்களைத் திறந்தார் (லூக்கா 24:44-45) உயிர்த்தெழுந்த ஆண்ட- வர் எருசலேமிலிருந்து எம்மாவுசுக்குச் செல்லும் பாதையில் அவரது சீடர்களில் இருவருக்கும் தோன்றினார் (லூக்கா 24: 13-35). புனித லூக் காவின் கணிப்பில் இந்த நிகழ்வு அவர் உயிர்த்தெழுந்த அதே நாளான ஞாயிறு தினத்தன்று நடந்தது என்று குறிப்பிடப்படுகிறது. இரு சீடர்களும் இயேசுவின் பாடுகள் மற்றும் இறப்புத் தொடர்பான அண்மையில் நடந்த நிகழ்வுகளைப் பற்றி விவாதித்தனர். அவர்களது பயணம் அவரது துயர மரணத்தில் துக்கத்தாலும் ஏமாற்றத்தாலும் குறித்துக் காட்டப்பட்டது.

தமிழில்
அருட்பணி. ஜீவேந்திரா போல் அ.ம.தி

தின் அர்த்தத்தை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை என்பதைப் பார்த்து அவர் இவ்வாறு கூறுகிறார்: 'அறிவிலிகளே மந்த உள்ளத்தினரே' (லூக்கா 24:25) என அழைத்து பின்னர் மோசே முதல் இறைவாக்கினர் அனைவ ரின் நூல்களிலும் தம்மைக் குறித்து எழுதப்பட்ட வாக்குறையும் அவர் அவர் களுக்கு விளக்கினார்.: (லூக்கா 24: 27).

கிறிஸ்துவே முதல் விளக்கவுரை அவர் அதனை நிறைவு செய்வார் என்பதைப் பழைய ஏற்பாடு முன்னறிவித்தது மட்டுமல்லாமல் மீட்பின் ஒரு வரலாற்றின் நிறைவும் அவரே என வெளிப்படுத்தும் பொருட்டு அதன் வார்த் தைகளுக்குப் பிரமாணிக்கமாக இருக்கவேண்டுமென விரும்பினார்.

7. திரு விவிலியம் ஒரு புனித நூலாக இவ்வாறு கிறிஸ்துவைப் பற்றிப் பேசுகி றது. அவர் துன்பத்தைத் தாங்கிக்கொண்டு அவருடைய மாட்சிக்குள் நுழைய வேண்டியவர் என்று அறிவிக்கிறது (லூக்கா 24:26). திருமறைநூலானது வெறுமனே ஒரு பகுதியில் மட்டும் அல்ல மாறாக முழுத் திருமறைநூலும் கிறிஸ்துவைப் பற்றிப் பேசுகிறது. திருமறை நூல்கள் இன்றி அவருடைய மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் சரியாகப் புரிந்து கொள்ள முடியாது.

அதனால்தான் 'மறை நூலில் எழுதியுள்ளவாறு கிறிஸ்து நம் பாவங்களுக்காக இறந்து அடக்கம் செய்யப்பட்ட மறை நூலில் எழுதியுள்ள வாறே மூன்றாம் நாளில் உயிருடன் எழுப்பப்பட்டார். பின்னர் அவர் கெபாவுக் கும் தோன்றினார்' (1 கொரி 15: 3-5). என்று நம்பிக்கையின் மிகப் பழமை யான அறிக்கைகளில் ஒன்று வலியுறுத்திக் கூறுகிறது. திருமறை நூலானது எல்லா இடங்களிலும் கிறிஸ்துவைப் பற்றிப் பேசுவதால் அவருடைய மரண- மும் உயிர்த்தெழுதலும் ஒரு கட்டுக்கதை அல்ல. மாறாக ஒரு வரலாறு ஆகும். அவை அவருடைய சீடர்களின் நம்பிக்கையின் மையமாக இருக்கின்றன என்று நம்மை நம்பச் செய்கின்றன.

புனித நூலையும் விசுவாசிகளின் நம்பிக்கையையும் ஒரு ஆழமான பிணைப்பு இணைக்கிறது. நம்பிக்கை செவிமடுப்பதிலிருந்து வருவதாலும் செவிமடுப்பது கிறிஸ்துவின் வார்த்தையை அடிப்படையாகக் கொண்டதாலும் (உரோமர்10:17) நம்பிக்கையாளர்கள் தமது திருவழிபாட்டுக் கொண்டாட் டங்க- ளிலும் தமது தனிப்பட்ட மன்றாட்டிலும் தியானத்திலும் இறை வார்த்தைக்குக் கவனமுடன் செவிமடுக்க வேண்டும்.

8. எம்மாவுசில் சீடர்களுடன் உயிர்த்தெழுந்த ஆண்டவர் மேற்கொண்ட பயணம் ஒரு உணவுடன் நிறைவு பெற்றது. ஒரு வழிப்போக்கர் போன்று தோன் றிய இயேசு அவர்களின் கட்டாயப்படுத்திய விண்ணப்பத்திற்கு இணங்கினார்: 'எங்களோடு தங்கும். ஏனெனில் மாலை நேரம் ஆயிற்று. பொழுது போயிற்று' (லூக் 24:29). அவர்கள் பந்தியில் அமர்ந்த போது இயேசு அப்பத்தை எடுத்து, கடவுளைப் போற்றி பிட்டு அவர்களுக்குக் கொடுக்கிறார். அப்போது அவர்கள் கண்கள் திறந்தன. அவர்களும் அவரை அடையாளம் கண்டுகொண்டார்கள். (லூக் 24:31).

இந்தக் காட்சி புனித நூலுக்கும் நற்கருணைக்கும் இடையிலான முறிவுறாத பிணைப்பைத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. திரண்டாம் வத்திக் கான் சங்கம் கற்பிப்பது போல, 'திருஅவை நம் ஆண்டவரின் திருவுடலுக்கு வணக்கம் செலுத்துவது போலவே திருவிவிலியத்திற்கு என்றும் வணக்கம் செலுத்தி வந்துள்ளது. சிறப்பாக, திருவழிபாட்டில் இறைவார்த்தையையும் கிறிஸ்து வின் உடலையும் பரிமாறும் பந்தியிலிருந்து வாழ்வின் அப்பத்தைப் பெற்று இறைமக்களுக்கு அழிக்க அது தவறுவதில்லை.' (இறைவழிபாடு 21). புனித நூல்களைத் தவறாமல் வாசிப்பதும், நற்கருணைக் கொண்டாட்டமும் நம்மை ஒருவரோடு ஒருவர் பங்காளிகளாகப் பார்க்க வைக்கிறது. கிறிஸ்- தவர்களாகிய நாம் ஒருவராக மக்கள். வரலாற்றில் எங்கள் திருப்பயணத்தை வழிநடத்துகிறோம். இறைவனால் நிலைநிறுத்தப்படுகிறோம். நம்மிடையே வாழும் இறைவன் நம்முடன் பேசுகிறார். எமக்கு ஊட்டமளிக்கிறார்.

திருவிவிலியத்திற்கு அப்பணிக்கப்பட்ட ஒரு நாளை ஒரு வருடந்த நிகழ்வாக மட்டும் பார்க்கக்கூடாது. மாறாக வருடம் முழுவதும் நீடிக்கும் நிகழ்வாக இருக்க வேண்டும். ஏனென்றால் திருமறை நூல்களும் உயிர்த் தெழுந்த ஆண்டவரின் அறிவிலும் அன்பிலும் நாம் மிகவே வளருதல் அவ சிய மாகிறது. இதன் பொருட்டுத் திருமறை நூலுடனான நெருக்கமான உறவை வளர்த்துக் கொள்ளுதல் எமக்கு அவசியமானது. இல்லையேல் எமது உள்ளம் உறைந்து கண்கள் மூடப்பட்டு பல தரப்பட்ட குருட்டுத் தனங்களால் தாக்கப்படு- வோம்.

புனித நூல்களும் அருட்சாதனங்களும் இவ்வாறு பிரிக்க முடியா- தவை. அருடசாதனங்கள் இறை வார்த்தையால் அறிமுகப்படுத்தப்பட்டு ஒளி ஏற்றப்படும் போது, அவை ஒரு செயலாக்கம் பெற வழிவகுக்கும் நோக்கமாக மாறும். இதன் மூலம் கிறிஸ்து தனது மீட்பளிக்கும் செயலை ஏற்றுக்கொள்ள நம் மனதையும் இதயத்தையும் திறக்கிறார். திருவெளிப்பாடு நூலினது போத னைகளை நாம் எப்பொழுதும் மனதில் கொள்ள வேண்டும். நம் ஆண்டவர் கதவு அருகில் நின்று தட்டிக்கொண்டிருக்கிறார். யாராவது அவரது குரலைக் கேட்டுக் கதவைத் திறந்தால், அவர் உள்ளே சென்று அவர்களோடு உணவு அருந்துவார். அவர்களும் அவரோடு உணவு அருந்துவார்கள். (திருவெளிபாடு 3:20). திருமறை நூலின் வார்த்தைகளில் கிறிஸ்து இயேசு நம் கதவண்டை யில் தட்டுகிறார். அவருடைய குரலைக் கேட்டு, நம் மனதின் மற்றும் இதயங்க- பயனுள்ளது: (திமொத்தேயு 3:16) என உறுதியாக நம்புகிறது. திருமறைநூல் உள்ளடக்கும் மீட்புப் பணி நோக்கம். ஆன்மீகப் பரிமாணம் உள்ளார்ந்த மனுவுருக் கோட்பாடு போன்ற சிறப்பு மிக்க கருப்பொருள் பற்றிக் கூறும் இறைவெளிபாடு எனும் சங்கக் கோட்பாட்டிற்குப் பல்வே அடிகளார் திமொத் தேயுவுக்குக் கூறும் அறிவுரையே அடிப்படையாக அமைகிறது.

முதலாவதாக, திமோத்தேயுவுக்குப் பல்வே அளித்த ஊக்கத்தை நினைவுபடுத்தும் இறைவெளிபாடு எனும் ஏடு 'நம் நிறை வாழ்விற்காகக் கடவுள் தூய நூல்களில் அடக்க விரும்பிய உண்மையையே திருவிவிலிய நூல்கள் நமக்கு உறுதியுடனும் உரிமையுடனும் தவறின்றியும் போதிக் கின்றன என்பதையும் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். (இறைவெளிப்பாடு எண் 11) என்று வலியுறுத்துகிறது. இயேசுக்கிறிஸ்துவிலுள்ள நம்பிக்கை யால் உம்மை மீட்புக்கு வழிநடத்தும் மறைநூல் (2 திமொத்தேயு 3:15) ஞானத்தை அளிக்க வல்லது. அந் நூல்கள் எமது மீட்பிற்கு ஆதாயமான நூல்களைக் கொண்டுள்ளன.

திருவிவிலியம் என்பது வரலாற்று நூல்களின் தொகுப்போ அல்லது ஒரு குறிப்பேடோ அல்ல மாறாக அது முற்றிலும் மனிதரின் ஒருங் கிணைந்த மீட்பை நோக்கமாகக் கொண்டுள்ளது. திருவிவிலியத்தின் நூல்களில் தெளிவாக வழங்கப்படும் வரலாற்றுப் பின்புலம் அவற்றின் முதன்மை இலக்காகிய நமது மீட்பைக் கண்டுகொள்ளத் தவற விடக்கூடாது. அனைத்- தும் இந்த நோக்கத்திற்காக இயக்கப்பட்டன. திருவிவிலியத்தின் இயல்புக்கு இவை இன்றியமையாதவை ஆகும். மீட்பின் வரலாறாக வடிவமைக்கப்பட்ட புனித நூல் தூய ஆவியாரின் செயற்பாட்டின் மூலம் மீட்பின் நோக்கத்தை அடையத் தீமையிலிருந்தும் மரணத்திலிருந்தும் ஆண், பெண் என்று எல்லோரையும் மீட்கும் வண்ணம் கடவுள் தாமே உரையாடிச் செயற்பட்டு வருகிறார். இவ்வாறு மனித வழக்கப்படி எழுதப்பட்ட மனித வார்த்தைகள் கடவுளின் வார்த்தையாகிறது (இறை வெளிப்பாடு 12) வேதநூலில் தூய ஆவியாரின் பங்கு ஆதிகாலமானது. தூய ஆவியாரின் செயற்பாடு இல்லா மல். எழுத்து வடிவில் காணப்படும் உரைக்கு மட்டும் இறைவார்த் தையை மட்டுப்படுத்துவது எப்போதும் ஆபத்தானது. இது ஒரு அடிப்படை வாத வாசிப்புக்கு வழிவகுக்கும். இது தவிர்க்கப்பட வேண்டியது. அன்றேல் இறைவேவுக்கும் பற்றாலும் ஆற்றல் மிக்கதும் ஆன்மீக இயல்பும் கொண்ட தூய்மையான இறை வார்த்தையை நாம் காட்டிக் கொடுத்தவர்களாவோம். "எழுதப்பட்ட உரையால் விளைவது சாவு தூய ஆவியால் விளைவது வாழ்வு" (2 கொரிந்தியர் 3:6) எனத் திருத்தூதர் நமக்கு நினைவூட்டியது போல இறைவனுடைய தூய மக்களின் இறை நம்பிக்கை அனுபவத்தில் மரபு ரீதியாகப் பரிமாறப்பட்ட இறை வார்த்தை கடவுளின் உயிருள்ள வார்த் தையாகத் தூய ஆவியார் உருமாற்றுகிறார்.

10. தூய ஆவியாரின் பணி புனித நூல்களை உருவாக்குவதோடு மட்டுமல்ல இது இறை வார்த்தையைக் கேட்பவர்களிடமும் ஆக்கம் கொண்டுள்ளது. பொதுச் சங்கத் தந்தையர்களின் போதனையானவை புனித மறைநூல் கள் 'ஆயியாரின் திருவிவிலியம் தூய ஆவியாரால் எழுதப்பெற்றது. அதே ஆவியாரின் தூண்டுகொண்டு அதனைப் படிக்கவும் அதற்குப் பொருள் விளக்கம் செய்யவும் வேண்டும்: (இறைவெளிப்பாடு 12) கடவுளின் இறை வெளிப்பாடு இயேசுக் கிறிஸ்துவில் அதன் நிறைவும் முழுமையும் பெறு- கிறது. இருப்பினும் தூய ஆவியார் தாம் செயற்படவதை நிறுத்தவில்லை. புனித நூல்களில் இறை ஏவுதல் மற்றும் மனித ஆசிரியர்களுக்கும் தூய ஆவியாரின் செயற்பாட்டை மட்டுப்படுத்துவது உண்மையில் அவரது செயற்பாட்டைக் குறைத்துக் கூறுவதாக இருக்கும். திருஅவை வேத நூல் களைக் கற்பிக்கும் போதும். திருஅவை ஆசிரியம் அவற்றிக்கு பொருள் விளக்கம் அளிக்கும் போதும் ஒவ்வொரு நம்பிக்கையாளரும் தமது ஆன்மீக வாழ்வில் வேத நூல்களை நியமங்களாகக் கருதும் பொழுதும் தூய ஆவி யார் இறை ஏவுதல் வழங்கிச் செயலாற்றுகிறார் என்று நாம் உறுதியாக நம்ப வேண்டும்.

இப் பொருளில் அவரது உவமைகளின் பொருளை இப்பொழுது அவர்கள் புரிந்து கொண்டார்கள் என்று இயேசு தமது சீடர்களுக்கு கூறிய வார்த்தைகளை நாம் புரிந்து கொள்ள முடியும். ஆகையால் விண்ணரச பற்றிக் கற்றுக் கொண்ட எல்லா மறைநூல் அறிஞரும் தம் கருவூலத்தில் இருந்து புதியவற்றையும் பழையவற்றையும் வெளிக்கொணரும் வீட்டு உரிமையாளரைப் போல் இருக்கின்றனர். (மத்தேயு 13:52).

11. இறைவெளிப்பாடு எனும் ஏடு தெளிவுபடுத்துவது என்னவென்றால் 'காலம் கடந்த தந்தையின் வாக்கு முற்காலத்தில் வலுவற்ற மனித உடலை ஏற்ற பொழுது எவ்வாறு மனிதரைப் போல இருந்தாரோ அவ்வாறே மனித மொழியில் வெளிப்படும் கடவுளின் சொற்களும் மனித மொழியை ஒத்தே இருக்கின்றன (இறைவெளிப்பாடு 13). முடிவில்லா வார்த்தையின் மனித அவதாரம் இறைவார்த்தைக்கும் மனித மொழிக்கும் இடையிலான உறவுக்கு வரலாற்று ரீதியான பண்பாட்டு ரீதியான நியமங்களுக்கு உருவமும் பொரு ளும் கொடுக்கின்றன.

காவலன் கலசம் காவலன் கலசம் காவலன் கலசம் காவலன் கலசம் காவலன் கலசம் காவலன் கலசம் காவலன் கலசம்
காவலன் கலசம் காவலன் கலசம் காவலன் கலசம் காவலன் கலசம் காவலன் கலசம் காவலன் கலசம் காவலன் கலசம்
காவலன் கலசம் காவலன் கலசம் காவலன் கலசம் காவலன் கலசம் காவலன் கலசம் காவலன் கலசம் காவலன் கலசம்

வழிபாடு வாழ்வாகுமா!!



அருட்பணி ச.ஜே.சுரேந்திரராஜா அ.ம.தி
(sjsurenomi@gmail.com)

(சென்ற இதழின் தொடர்ச்சி....)

திருப்பலிக்கான திரு உடை

மேற்குறிப்பிட்ட திருவழிபாட்டிற்கான ஆடைகளில் இருந்து உண்மையான உரோமைப் பேரரசின் ஆடைகள் எப்படி இருக்கும் என்று அடையாளம் காணலாம். குறிப்பாக மனிப்பிள் என்பது அவர்களின் கைக்குட்டையாகப் பயன்படுத்தப்பட்டது. தோள் துகில் எதற்காக அணியத் தொடங்கினார்கள் என்பதற்கான காரணம் முழுமையாக தெரியாது. ஆனால் 9ம், 10ம் நூற்றாண்டுகளில் இந்தத் தோள்துகிலை வீட்டிலோ அல்லது பயணம் செய்யும்போதோ அணிவது ஒரு கட்டாயமாக இருந்தது. குருக்கள் வழிபாட்டிற்காக அணிகின்ற ஆடைகளின் இறையியல் கருத்துக்களைக் கவனமாகப் படிக்கின்ற போது மூன்று முக்கிய விடயங்கள் தெளிவாகின்றது:

1. குருத்துவத்திலே தாங்கள் பெற்றுக் கொண்ட ஒழுக்க, நீதிக் கடமைகளுக்குப் பிரமாணிக்கமாய் இருந்து அவற்றை விசுவாசக் கண்ணோட்டத்தில் பின்பற்றுவது அவர்களது தார்மீகக் கடமை.
2. கிறிஸ்துவை ஆடையாய் அணிவதை அறிந்து அதை உள்வாங்கி அவரையே வாழ்கின்றோம் என்று நம்பவேண்டும் - (எபே 4:24)
3. கிறிஸ்துவின் பாடுகள், பலி வாழ்வு நினைவு கூரப்படுகின்றது. இந்த உண்மையை தூய மனதோடும், தூய வாழ்வோடும் நிறைவேற்ற வேண்டும்.

திருப்பலிக்கான திரு உடைகள் நிற வேறுபாடுகளுடன் காணப்படுகின்றன. இது அதனது காலத்தையும், அவ்வழிபாட்டிற் குரிய தன்மையையும் காட்டுகின்றது. "கொண்டாடப்படுகின்ற நம்பிக்கையின் மறைநிகழ்வுகளைத் தக்கவாறு உணர்த்துவதற்கும் கிறிஸ்தவ வாழ்க்கை திருவழிபாட்டு ஆண்டின் காலப்போக்குடன் இணைந்து முன்னேறிச் செல்கின்றது என்பதைச் சிறப்பாகவும் வெளியரங்கமாகவும் காட்டுவதற்கும் இந்த நிற வேறுபாடுகள் பயன்படுகின்றன. திருவுடைகளின் நிறத்தைப் பொறுத்தமட்டில் மரபுவழிப் பயன்பாடு பின்பற்றப்பட வேண்டும். அதாவது:

அ) வெண்ணிறம்: பாஸ்காக் காலத்திலும் ஆண்டவருடைய பிறப்புக் காலத் திருப்பலிகளிலும், திருப்புகழ்மாலைக்கொண்டாட்டங்களிலும், திருப்பாடுகளைச் சாராத ஆண்டவருடைய விழாக்களிலும் புனித கன்னி மரியா, வானதூதர், மறைச்சாட்சியர் அல்லாத புனிதர்கள் ஆகியோரின் விழாக்களிலும், புனிதர் அனைவர் பெருவிழா (நவ. 1), புனிததிருமுழுக்குயோவான் விழா (ஜூன் 24), நற்செய்தியாளரான புனித யோவான் விழா (டிச. 27), புனித பேதுரு தலைமைப்பீட விழா (பெப். 22), புனித பவுல் மனந்திரும்பிய விழா (ஜன. 25) ஆகிய நாட்களிலும் வெண்ணிறம் பயன்படுத்தப்படும்.

ஆ) சிவப்பு நிறம்: ஆண்டவருடைய திருப்பாடுகளின் ஞாயிறு, புனித வெள்ளிக் கிழமை, பெந்தக்கோஸ்துஞாயிறு, ஆண்டவருடைய பாடுகளின் கொண்டாட்டங்கள், திருத்தூதர்கள், நற்செய்தியாளர்கள், மறை சாட்சியரான புனிதர்கள் ஆகியோரின் விண்ணகப் பிறப்பு நாட்கள் ஆகிய வற்றில் சிவப்பு நிறம் பயன்படுத்தப்படும்.

இ) பச்சை நிறம்: ஆண்டின் பொதுக் காலத் திருப்பலிகளிலும், திருப்புகழ் மாலைக் கொண்டாட்டங்களிலும் பச்சை நிறம் பயன்படுத்தப்படும்.

ஈ) ஊதா நிறம்: திருவருகைக் காலத்திலும் தவக் காலத்திலும் ஊதா நிறம் பயன்படுத்தப்படும் இறந்தோருக்கானதிருப்பலிகளிலும்திருப்புகழ்மாலைக் கொண்டாட்டங்களிலும் பயன்படுத்தப் படலாம்.

உ) கறுப்பு நிறம்: வழக்கத்தில் இருப்பின் இறந்தோருக்கான திருப்பலிகளில் கறுப்பு நிறம் பயன்படுத்தப்படலாம்.

ஊ) இளஞ்சிவப்பு நிறம்: வழக்கத்தில் இருப்பின் திருவருகைக் கால 3-ஆம் ஞாயிறு அன்றும் ("மகிழுங்கள் ஞாயிறு) தவக்கால 4-ஆம் ஞாயிறு அன்றும் ("அகமகிழ் ஞாயிறு) இளஞ்சிவப்பு நிறம் பயன்படுத்தப்படலாம்.

எ) மிகச் சிறப்பான கொண்டாட்டங்களின்போது திருவுடைகள் வழிபாட்டு நாளுக்கு உரிய நிறமாக இல்லையென்றாலும் சிறப்புமிகு அல்லது உயர்வகைத் திருவுடைகள் பயன்படுத்தப்படலாம்" (உ.தி.நூ.பொ.ப: 345-346).

இதைத் தவிர ஊதா நிறத்தைக் கொண்ட வழிபாட்டு உடைகளை ஒப்புரவு அருட்சாதனத்தின் போதும், நோயிற்பூசுதல் அருட்சாதனத்தின் போதும் பயன்படுத்தலாம். ஊதா நிறம் எப்போதும் வாழ்வில் நம்பிக்கையைத் தருகின்றது. இது துக்க நேரங்களை அனுஸ்டிக்கும் போது கவலை நிறைந்தஉணர்வுகளைத்தருகின்றதுஎன்கின்ற கருத்தை விடுத்து, அது வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் நம்பிக்கையை நோக்கி வழி நடக்க அழைக்கின்றது. எமது பயன்பாட்டில் இல்லாத கறுப்பு நிற வழிபாட்டு ஆடை இன்னும் பல நாடுகளிலும் அதனது வழிபாட்டு நிகழ்வுகளிலும் பயன்படுத்தப்படுகின்றது. இது குறிப்பாக இறந்தோருக்கான திருப்பலியில் பயன் படுத்தலாம். வெள்ளைநிறத்தைக்கொண்ட வழிபாட்டு உடைகளைத் திருமுழுக்கு அருட்சாதனத்தின் போதும், திருமண, குருத்துவ அருட்சாதனத்தின் போதும் பயன்படுத்தலாம். இவ்வெள்ளை நிறம் என்பது புனிதத்தன்மை, தூய்மை நீதி மற்றும் நேர்மையைக் குறிக்கிறது.

ஆனால் வழிபாட்டு உடைகள் தங்க நிறத்திலோ அல்லது வெள்ளி நிறத்திலோ பயன்படுத்தப்பட வேண்டும் என்று உரோமைத் திருப்பலி நூலிலோ அல்லது வழிபாட்டு ஒழுங்குக் கோவையிலோ குறிப்பிடப்படவில்லை. இவைகளைப் பயன் படுத்துவது தவறு என்றும் கூறவில்லை, ஆனால் தெரிந்திருக்க வேண்டும் என்று குறிப்பிட்டுக் காட்டுகிறேன்.

சிவப்பு நிற உடை உறுதிப்பூசுதல் அருட்சாதனத்தின் போதும் பயன்படுத்தலாம். இந்நிறம் என்பது இரத்தத்தின் நிறம் மேலும்தங்களைக் கிறிஸ்துவுக்காய்மறை சாட்சியாய் மாய்த்துக்கொண்டவர்களை நினைவு கூர்ந்து அவர்களது தியாக அன்பைப் போற்றவும் இந்த நிறம் பயன் படுத்தப்படுகின்றது. பச்சைஎன்பதுவசந்தத்துடன் தொடர்புடைய நிறமாகும்.

இது புதிய வாழ்க்கையையும், மீள் உருவாக்கத்தையும் மற்றும் நம்பிக்கையையும் குறிக்கப்பயன்படுகிறது.

(தொடரும்...)

200 ஆம் ஆண்டை நோக்கிப் பயணிக்கும் போர்டோவின் திருக்குடும்ப சபைச் சகோதரிகள்

திருக்குடும்ப சபை 200 ஆம் ஆண்டை நோக்கிப் பயணிக்கும் இவ்வேளையில் அச்சபையின் வரலாற்றுத் தடங்கள் தொடராக வெளிவரவுள்ளது...

அருட்சகோதரி லுமினா போல்ராஜா
திருக்குடும்பக் கன்னியர் சபை

(சென்ற இதழின் தொடர்ச்சி...)

இன்று எம்சபையில் உள்ள அழைத்தல்கள்:

அப்போஸ்தோலிக்க துறவியர் குழு:

இறைமகன் இயேசுவைத் தாம் வாழுகின்ற குழுவிலும், பணித்தளங்களிலும், சூழமைவிலும் வெளிப்படுத்தி விசுவாசத்தையும், அன்பையும் வலுப்படுத்தி, விரிவுபடுத்தி மக்களின் மகிழ்விலும், ஏக்கங்களிலும் பங்குகொண்டு இறையரசின் மதிப்பீடுகளுக்கு வாழ்வாலும் வார்த்தையாலும், தம் மூன்று வாக்குத்தத்தங்களாலும் சாட்சியம் பகரும் குழு. திருக்குடும்ப பொதுநிலையினர் தமது குடும்ப, சமூக, அரசியல், கலாசார சூழ்நிலைகளில் தமது திருமுழுக்கு வாழ்வை ஆழமான முறையில் வாழ்ந்து, கிறிஸ்தவ வாழ்வுக்கு மாதிரிகையாகி, விசுவாசத்தை வலுப்படுத்தி, விரிவுபடுத்தும் இலட்சியத்தைக் கொண்டு வாழும் பொதுநிலையினஉதிரித்துவத்தின், திருக்குடும்பத்தின், ஆதிக் கிறிஸ்தவர்களின் மனப் போக்கை ஆன்மீக வாழ்வாகக் கொண்டு சாட்சியம் பகிரும் குழு.

திருக்குடும்பக் குருக்கள்

பாதை வகுத்தபின் பயந்தென்ன இலாபம் இறைவனின் திட்டத்திற்கேற்ப இறை பராமரிப்பில் தங்கி வாழ்ந்த தந்தை பியன்வெனு பல சவால்களைச் சந்திக்க வேண்டியிருந்தது. மனமகிழ்ச்சியுடன் இணைந்த மூன்று இளம்பெண்களும் மனச்சோர்வடைந்து, உற்சாகமிழக்கும் நிலைக்கு வரக்கூடியளவு வேலை வாய்ப்போ, பணிகளோ இன்றி மனத்தைரியத்தை இழந்தனர். இந்நிலையில் இறைவன் அவர்களைக்கைவிடவில்லை. ஒரு ஏழைச் சிறுமியைப் பராமரிக்கும் பொறுப்பை அவர்களிடம் கொடுத்தார். காலம் செல்லச் செல்ல குழுவில் சேர்கின்ற பெண்களின் தொகை கூடியது. வளர்ச்சிப்படியில் முன்னேறும் வேளை பல வதந்திகளும், விமர்சனங்களும் குழுவுக்குப் பாதகமாக எழுந்தன. குழு ஆரம்பிக்கப்பட்டது ஒரு நியாயமற்ற செயலாகச் சிலருக்குப் புலப்பட்டது. ஆரம்பத்தில் தைரியமூட்டித் தட்டிக்கொடுத்த நண்பர்கள் கூட புறமுதுகைக் காட்டினர். பேராயர் கூட பரவிய செய்திகளால் தந்தையை சந்தேகத்தோடு நோக்கினார். தந்தையின் இக்காலகட்டம் ஒரு வேதனையின், கைவிடப்பட்ட நிலையின் காலகட்டம். எனவே பலர் தந்தையின் முயற்சிகள் அனைத்தும் கருகிவிடும், கலைந்து விடும், அழிந்துவிடும் என்று எண்ணினர். ஏளனம்கூடச் செய்தனர். இவ்வாறான புயல்காற்றும், கொந்தளிப்புப்பலபக்கங்களிலும் சுற்றிவளைத்து அலைமோதி அடித்த போதும்தந்தை பியன்வெனுவின் உள்ளம் என்னும் கட்டிடம் சாய்ந்துவிடவில்லை. மாறாக உறுதியடைந்தது. தூய பவுல் கூறுவது போல் "நாங்கள் எல்லாச் சூழ் நிலைகளிலும் இன்னலுற்றாலும் மனம் உடைந்து போவதில்லை. குழப்பமுற்றாலும் நம்பிக்கை இழப்பதில்லை. துன் புறுத்தப்பட்டாலும் கைவிடப்படுவதில்லை. வீழ்த்தப்பட்டாலும் அழிந்துபோவதில்லை." (2கொரி 4:8-9) என்பது இவரின் வாழ்வின் அனுபவமாக இருந்தது. தன் சொந்த வாழ்வின் அனுபவத்தினூடாக இறைவனில் தன் அடித்தளத்தை உறுதியாக இட்ட பியன்வெனு சபையின் அடித்தளத்தையும் உறுதியாக இட இவ்வனுபவங்கள் வழிவகுத்தன. திருத்தூதஉபணி நூல் கூறுவதுபோல் "இவர்கள் திட்டமும், செயலும் மனிதரிடத்திலிருந்து வந்தவை என்றால் அவை ஒழிந்து போகும். அவை கடவுளைச் சார்ந்தவை என்றால் நீங்கள் அவற்றை ஒழிக்கமுடியாது." (5:39) என்பதற்கொப்ப இவர்களின் உறுதிப்பாடான விசுவாச வாழ்வு குழுவில் சேர்ந்த அனைவரும் மனம்தளராது தம் இலட்சியப் பாதையைத் தொடரப் பலம் அளித்ததுடன் பற்றுக்களை நீக்கி கீழ்ப்படிவு, ஏழ்மை, இறைவனுக்குக் கையளித்தல் என்பவற்றில் உதாரகுணத்துடன் செயற்படவும் உற்சாகம் அளித்தது. துளிர்விடும் காலமும் காலத்தில் தொடர்ந்த பணிகளும் நிலத்தில் போட்ட விதை தன்னை அழித்து, உடைத்து துன்புற்றுத் தான் முளைவிடுகின்றது. இதேபோல்தான் சபையும் துளிர்விட ஆரம்பித்தது. பல இன்னல்கள், இடையூறுகள், தடைக் கற்களைத் தாண்டி எம் திருக்குடும்ப சபையும் இளம் துளிராக வளர ஆரம்பித்தது.

ஐந்து மாதங்கள் கடந்தபின் 1820ம் ஆண்டு ஐப்பசி மாதத்தில் சபையின் அத்திவாரக் கற்களாக இருந்தவர்கள் ஒரு வருடகால நவசந்நியாசத்தை ஆரம்பித்தனர். தந்தை பியன்வெனுவின் சகோதரி கத்தறின் அமி எல்லோரின் விருப்பத்திற்கேற்ப சபையின் தலைவியாகத் தெரிவு செய்யப்பட்டார். முதன்முதல் சபையில் ஏழ்மை, விரத்தத்துவம், கீழ்ப்படிதல் எனும் வாக்குத்தத்தங்களை ஒரு வருட காலத்துக்கு நிறைவேற்ற அனுமதி பெற்ற கத்தரின் அமி தனது குடும்பப் பெயரை மாற்றி அன்னை திறினிற்றி என்ற பெயருடன் இறைபணியாற்றினார். இவர்கள் வாழ்ந்த இல்லத்தில் தேவநற் கருணை வைத்திருக்கவும், பலிநிறை வேற்றவும் பேராயர் அனுமதி அளித்தார். (தொடரும்...)

அவசரகாலப் பதில்

அருட்தந்தை செ. அன்புராசா, அமதி அடிகளார்

‘என் கேள்விக்கென்ன பதில்!’

என்ற பகுதியை கடந்த வாரம்வரை எழுதிவந்தார். காலத்தின் அறிகுறி–களைக் கருத்தில் கொண்டு அவரின் பதில்கள்

‘அவசரகாலப் பதில்’

என்ற தலைப்பில் தொடர்ந்து வெளிவரும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். வாசகர்களாகிய நீங்கள் கேள்விகளைக் கேட்டு பயனடைய இப்பகுதியைப் பயன்படுத்துங்கள். ஆர்

கேள்வி: ஈரானின் அதியுயர் சக்தி வாய்ந்த இரண்டாவது மனிதராகக் கருதப்படும் இராணுவத் தளபதி காசிம் சுலைமான் அமரிக்க ஏவுகணைத் தாக்குதலில் கொல்லப்பட்டார். இவருடைய இறுதி ஊர்வலத்தில் வரலாறு காணாத மக்கள் திரள் கூடியிருந்ததே! உலக சாதனையாகலாம் அல்லவா!?

ப: கருதலாம்! ஆனால், இவருடைய இறுதி ஊர்வலத்திற்குச் சென்ற பல்லாயிரக் கணக்கான அம்மக்கள் திரளில் ஐம்பது பேர் சனநெரிசலில் சிக்கி உயிரிழந்திருக்கிறார்கள்! அவ்வாறாயின், அதனை (ஊர்வலத்தில் கலந்துகொண்ட மக்களின் தொகையை) உலக சாதனையாகப் பதியப்படும்போது இதனையும்(நெரிசலில் சிக்கி இறந்த அப்பாவிகளின் எண்ணிக்கையையும்) உலக சாதனையாகப் பதிப்பித்துக்கொள்ள வேண்டும்!

(குசி, கிளிநொச்சி)

கே: அமரிக்காவின் ஏவுகணைத் தாக்குதலில் ஈரானிய உயர் இராணுவத் தளபதி இறந்தார். மத்திய கிழக்குப் பகுதியில் கொஞ்சம் பதட்டமான சூழல் உருவாகலாம் எனச் சில செய்திகள் தெரிவித்தன. அதற்காக, ஏன் எமது மக்கள் பெற்றோல் நிரப்பு நிலையங்களில் தாரைதாரையாக வரிசைகளில் நின்றார்கள்?

ப: பழக்க தோசத்தில்தான்!

(ஆன், யாழ்ப்பாணம்)

கே: 2020ஆம் ஆண்டு ‘துயருறுவோர் ஆண்டு’ என யாழ். மறைமாவட்டத்தில் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இப்படி இருக்கையில் நாம் ஒவ்வொருவரும் என்ன செய்யலாம் என ஒரு ஆலோசனை தரமுடியுமா?

ப: ஆன், தீய-தவறான-கூடாத வார்த்தைகளைப் பாவிப்பது, அடுத்தவரைப் வெறுப்பது, மற்றவர்மீது பொறாமைப்படுவது, அடுத்தவரை அன்னியப்படுத்துவது, ஒதுக்கி ஓரம்கட்டுவது போன்றவற்றால் அடுத்தவர்களைத் துன்புறுத்தாமல் இருந்தாலே ஒவ்வொருவருக்கும் முதலில் பெரும் புண்ணியம் கிடைக்கும்! அடுத்து, துயருற்றிருப்பவருக்கு ஆறுதல் கொடுப்பதாக ஒருவரின் வார்த்தைகள், பிறரன்புச் செயல்கள் அமைகிறபோது அதுவேமேற்சொன்ன புண்ணியத்தைப் பென்னம்பெரிய புண்ணியமாக்கிவிடும்! துயருறுவோரை மேலும் துன்பத்துக்குள்ளாக்காமல் அவர்கள் ஆறுதலும் துன்பத்திலிருந்து விடுதலையும் பெற நம் சொல்லாலும், பிறரன்புச் சேவைகளாலும் அன்புப்பணியாற்றுவது **‘துயருறுவோர் ஆண்டு’** இல் நாம் ஒவ்வொருவரும் மேற்கொள்ளக்கூடிய ஒரு நல்ல செயலாகும்.

(வேங்கை, வன்னி)

கே:இலங்கையின் அரச கரும மொழியாக சிங்களமும் தமிழும் இருக்கையில், தேசிய கீதத்தைச் சிங்களத்தில் தான் பாடவேண்டுமென கடும்போக்குடைய ஒரு பகுதியினர் கங்கணம்கட்டி நிற்கின்றார்கள்! இது பற்றிதங்களின் கருத்துஎன்ன?

ப: தேசிய கீதத்தை பாடுவதையே நம் நாட்டில் அரசியலாக்கி வைத்திருக்கிறார்கள் என்றால் நீங்கள் அதனைச் சிங்களத்தில் பாடினாலென்ன, தமிழில் பாடினாலென்ன, கிந்தியில் பாடி னால் தான் எனக்கென்ன!? ஆனால், விரைவில் சீனத்தில் பாடவேண்டி வர லாம். இருந்து பாருங்கள்! என்ன செய்வது? இருக்கவேண்டிய நேரத்தில் அவர்கள் இல்லை! இருந்திருந்தால், இருக்கவேண்டிய இடத்தில் இருக்க வேண்டியவர்கள் இருந்திருப்பார்கள்! இல்லையென்றால், இருக்கவேண்டிய இடத்தில் இருக்கவேண்டியவைகளையும் இருத்தியிருப்பார்கள்! என்ன செய்வது? காலம் செய்த கோலம்! பூனைமாதிரி இருந்தவர்கள் எல்லாம் இப்போது புலி போல நடக்கிறார்கள்!

கேள்விகளைக் கேளுங்கள், பதில்களைப் பாருங்கள்!

(மது, யாழ்ப்பாணம்)

கே: வீதி விபத்துக்கள் அதிகமாக நடைபெறுவதால், ‘வேகக்தைக் குறையுங்கள்! வேகத்தைக் குறையுங்கள்’ என பலரும் கூறிவருகின்றார்கள்! வேகமாகச் சென்றால்தானே விரைவாகப் பயணங்களை செய்யமுடியும்?

ப: மது, வேகமாகச் செல்லவேண்டும், ஆனால், அளவுக்கு மிஞ்சிய வேகம் ஆபத்தில் முடியும்! வேகமாகச் சென்று, மேலே விரைவாக சென்றுவிடக்கூடாது என்பதனால்தான் ‘வேகத்தைக் குறையுங்கள்! வேகத்தைக் குறையுங்கள்!’ எனப் பலரும் தங்கள் அனுபவத்திலிருந்து கூறுகிறார்கள்!

(துரை, கிளிநொச்சி)

கே: ‘ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச அரசியல்வாதியாக இருக்காததால் உண்மையைப் பேசுகிறார், சரியானதையே செய்வார்!’ என இரா.சம்பந்தன் தமது புதிய நம்பிக்கையை வெளியிட்டிருக்கின்றாரே! சம்பந்தர் இவ்வாறு கூறுவதற்கு என்ன காரணம்!?

ப: நல்லாப் பேந்திற்றுது!

(விது, வவுனியா)

கே: கிழமை நாள்களில் பாடசாலை இப்போது காலை 7.30க்கு தொடங்கி பி. ப. 1.30க்கு நிறைவடைகின்றது. ரியுசன் சென்ரர் பி. ப. 3.00க்கு ஆரம்பமாகி 6.15 அளவில் நிறைவடைகின்றது. சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் பாடசாலை இல்லாவிட்டாலும் ரியூசன் சென்ரரில் பிள்ளைகள் நாளின் பெரும் பகுதியைக் கழிக்கின்றார்கள். இப்படி இருந்தால் பிள்ளைகள் எப்படித் தாங்கள் பெற்றுக்கொண்ட அறிவை புத்தாக்கத் திற்குப் பயன்படுத்த முடியும்? எப்படி அவர்கள் தங்கள் ஆக்கத் திறனை வளர்த்துக்கொள்வார்கள்?

அருட்பணி. செ. அன்புராசா அமதி

ப: விது, இன்று நம்முடைய பல பெற்றோர் தம்முடைய பிள்ளைகளை றோபோக்களைப்போன்று உருவாக்க நினைக்கிறார்களோ தெரியவில்லை! அறிவில் சிறந்தவர்களாக, ஆளுமை மிக்கவர்களாக, ஆற்றல் உடையவர்களாக, ஆன்மீக நெறியில் வளர்பவர்களாக உருவாக்குவதனைவிட அறிவினால் மட்டும் ஆளாக்கிவிடலாம் என நினைக்கிறார்கள்! இவ்வாறான நிலைப்பாடு ‘அறிவுவீக்கம்’ ஆக இருக்குமே தவிர ‘அறிவு வளர்ச்சி’ஆக மாறாது!

(மணி, யாழ்ப்பாணம்)

கே: இன்றைய பிள்ளைகளின் கேள்விகள் விபரீதமானவையாக இருப்பதனால் அவர்களின் கேள்விகளுக்குப் பதில் சொல்வது பெரும் கஸ்ரமாக இருக்கின்றது. யோசித்துத்தான் அவர்களின் கேள்விகளுக்குப் பதில் சொல்லவேண்டிஇருக்கின்றது. அப்படிக் கஸ்ரமான கேள்விகளைக் கேட்க இக்காலத்துப் பிள்ளைகள் எப்படிக் கற்றுக்கொண்டார்கள்?

ப: மணி, நீங்கள் கூறுவதுபோல அவர்களின் கேள்விகள் மட்டுமல்ல, அவர்களிடம் கேட்கப்படுகிற கேள்விகளுக்குக் கிடைக்கிற பதில்களும் சிலவேளைகளில் விபரீதமாகத்தான் அமைகின்றன! 2019 ஆம் ஆண்டில் பாடசாலையின் ஆண்டு இறுதிப் பரீட்சையில், ‘பஞ்ச பூதங்களின் பெயர்களைத் தருக?’ என ஒரு கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. ஒரு மாணவனோ அல்லது மாணவி–யோ, ‘தமிழ், ஆங்கிலம், கணக்கு, அறிவியல், சமூக அறிவியல்’ எனப் பதில் அளித்திருக்கிறான்(ள்)!

(கலா, இளவாலை)

கே: நல்ல மனதுடையவர்கள் குறைந்துகொண்டே போகின்றார்களே! காரணம் என்னவோ?

ப: கலா, ‘ஆமைக்கு மயிர் கிடையாது. முதலைக்கு நாக்குக் கிடையாது. மீனுக்கு இரைப்பை கிடையாது. நண்டுக்குத் தலை கிடையாது. பாம்புக்குக் காது கிடையாது. மனிதனுக்கு எல்லாம் இருக்கு, ஆனால், நல்ல மனசு கிடையாது!’ என்ற ஒருவருடைய கூற்றில் உண்மை இல்லாமல் இல்லை! நல்ல மனதுடையவர்கள் இல்லை என்று ஒரேயடியாகக் கூறி விட முடியாது, கூறவும் கூடாது! நல்ல மனதுடையவர்கள் இருக்கின்றார்கள், ஆனால், கணிசமான தொகையில் இல்லை! சில இடங்களில் தேடித்தான் கண்டுபிடிக்கவேண்டி இருக்கிறது!

(அன்ரன், மன்னார்)

கே: எனக்குத் தெரிந்த நபர் ஒருவர் நடக்காததை எல்லாம்நடந்ததுபோல கற்பனை பண்ணிக்கொண்டு, எல்லாவற்றையும் சந்தேகக் கண் கொண்டு பார்க்கின்றார். சாதாரண மானவர்போல காட்டிக்கொள்கின்றார். ஆனால், அவருக்குள்ளே ஒன்றுக்கொன்று முரண்பட்ட எண்ணப் போக்கினை அவதானிக்கின்றேன். பேய்க்குணமாக இருக்குமோ?

ப: அன்ரன், இது பேய்க்குணமும் அல்ல, நாய்குணமும் அல்ல, இது நோய்க்குணம்! ஒருவகை மனநோய்கான அறிகுறி இது! நல்லதொரு மனநல மருத்துவரிடம் சம்மந்தப்பட்டவரைக்கூட்டிச்செல்லுங்கள்! உடனடியாகச் சிகிச்சை அளியுங்கள்! இல்லையேல் இந்நோய், சளியில் தொடங்கி சன்னியில் வந்துநிற்பதுபோல முற்றி விடும்! இது, பேய்க்குணமும் அல்ல, நாய்க்குணமும் அல்ல, (மன)நோய்க்குணம் என எப்படி உங்களுக்குத் தெளிவாகத் தெரிகிறது என என்னை நீங்கள் கேட்டால், இப்படியான நோயாளிகள் சிலரைச் சந்தித்த அனுபவம் எனக்கும் உண்டு! அதனால்தான்,

உங்கள் கேள்விகளை, பெயர், முகவரியுடன் குறிப்பிட்டு, ‘அலசரகாலப் பதில்’, ‘அமைதித்தென்றல்’, உண்ணாப்புலவு, முல்லைத்தீவு என்ற முகவரிக்கோ, an-puomi1970@gmail.com **என்ற மின்னஞ்சலுக்கோ, அல்லது 0778 648 548 என்ற எண்ணுக்கு** sms, viber **அல்லது** whatsapp**க்கோ அனுப்பி வைக்கலாம்.**

சிக்கல்கள்

கயிற்றில் போட்ட முடிச்சுக்களைக் காட்டி ‘இதை அவிழ்க்க முயலுங்கள்’ என்றார் புத்தர். ‘அதற்கு முன் முடிச்சு போடுவதை நான் பார்க்க வேண்டும்’ என்றார் அவரது சீடர். பாராட்டிய புத்தர் சொன்னார் ‘ஒரு சிக்கல் ஏற்படுகிறதென்றால் அதற்குள் எப்படி மாட்டிக்கொண்டோம் என்பதைக் கண்டுபிடியுங்கள். அப்போது அதிலிருந்து வெளிவரும் வழி தானாக தெரியவரும்’ பலரும் சிக்கல்களைத் தீர்க்கும் அவசரத்தில் அவை உருவான விதத்தை உணர்வதேயில்லை. சிக்கல்களைத் தீர்க்க சீரான மனதும், காரணத்தை ஆராயும் அமைதியான ஆய்வுமே தேவை. ஒவ்வொரு பிரச்சினைக்குள்ளுமே அதற்கான தீர்வும் உள்ளது.

இளையோர் காவியம்...

நீ அழுகுரல் கேட்கிற பக்கம்
எழுகிற வீரன்

உன் அசைவுகள் கூட
கைவிடப்பட்டோரின் விடியல்

நீ மனிதத்தை சுரண்டும்
பதவிகளை தட்டிக் கேள்

கொலை மிரட்டல்கூட வரும்
கடவுளை நம்பினால் மனம் ஒரு தூசி

அழகு என்று தெரிந்தெடுத்து
மனிதர்கள் கூட்டியிருக்கிறார்கள் அன்புச் சபை

உயிர்களை மட்டும் நேசி
ஊனுடம்போடு சம்பந்தப்பட்டது அழகு

நீ இரக்கத்தின் சாலையில்
கடுகதி வேகத்தில் ஓடு

உறவுகள் ஆறுதல் கேட்கிறார்கள்
மரணத்தின் வாசலில்கூட நின்று

அழுகை முடிந்து விட்டது அல்ல
பசியில் அழுதபடி உறங்கிவிட்ட குழந்தை

உன் எழுகை தாமதமானால்
வருங்காலம்
தூக்கி வைக்கப்படும் சவப்பெட்டியில்

கிழிந்த ஆடைகளோடு போராடு
அவமானப்பட்டு நிற்கிறது மானம்

நீ பட்டாசுகள் கொழுத்துகிற
பணத்தை
ஏழைகளுக்கு புத்தாடை வேண்டிக் கொடு

உன் தோளில் சிலுவை சும
தலையில் கூட முள்முடி தரி

உலகில் பிறருக்காக வாழ்வது தான்
முதல்தர வாழ்க்கை

(தொடரும்...)

உயிரோவியன்

காவலன் கலசம்

என்னால் எல்லாம் முடியும்

இறைவன் துணையிருந்தால் நிகழும் அற்புதங்களோ இன்னும் ஏராளம்

லூக்கா நற்செய்தியாளர் தரும் சிறப்பான செய்திகளில் நயீம் நகர கைம்பெண்ணின் நிகழ்வும் ஒன்று. விவிலியத்தில் ஒரு வார்த்தை கூட பேசாத ஒரு பெண்ணாக, பெயர் குறிப்பிடப்படாத, மௌன கதாபாத்திரமாக காட்சி தந்து மைய இடம் பெறுபவர் நயீம் நகரப் பெண் எனலாம்.

லூக்கா நற்செய்தியாளர் மிகச் சுருக்கமான ஏழு வார்த்தைகளில் நயீம் நகர விதவைப் பெண்ணின் சோக நிகழ்வைச் சித்தரிக்கிறார். மிகக் குறுகிய வார்த்தைகளில் ஒரு கைம்பெண்ணுக்கு நேர்ந்த கொடுமைகளை, அவர் எதிர்கொண்ட தாங்க முடியாத துன்பங்களை இரத்தினச் சுருக்கமாக விவரிக்கிறார். இந்த ஏழு வார்த்தைகளும் பல ஆயிரம் துன்பப் பாடங்களை நமக்குச் சொல்லி நிற்கின்றன. துன்பத்தின் உச்சகட்டத்தில் குரலற்ற, தனிமையான, குடும்பப் பெண்ணாக புறம் தள்ளப்பட்டு, கைவிடப்பட்டு விளிம்பு நிலையில் வாழும் நயீம் நகர கைம் பெண்ணின் சோகத்தை அற்புதமாக விளக்குகிறார் எனலாம்.

நயீம் நகர கைம்பெண்ணின் துன்பம் கற்பனைகளின் எல்லைகளைத் தாண்டியது. ஒரு தாய் தன் ஒரே மகனைக் கல்லறைக்கு எடுத்துச் செல்லும் காட்சி கொடியது. உலகிலேயே மிகத் துயரமானது. சோகமானது. தன் வாழ்வின் ஒரே துணையாயிருந்த மகனை, வாழ்வின் ஆதாரமாக இருந்த அன்பு மகனைத் தன் தள்ளாத வயதில் கல்லறை நோக்கி அடக்கம் செய்ய தூக்கி வருகிறார். வாழ வேண்டிய என் மகனை ஏன் அடக்கம் செய்ய வேண்டும்? என் மகன் ஏன் சாக வேண்டும்? கடவுள் ஏன் அவனை விட்டு வைக்கக் கூடாதா? இவையெல்லாம் அவளது உள்ளத்தில் எழுந்த கேள்விகள். சோகங்களின் மத்தியில் கல்லறை நோக்கி நடந்து செல்லும் அன்னையும் அவருடன் அழும் கூட்ட மும்தான் நயீம் நகர பெண்ணின் கதை.

மகனை இழந்த ஏக்கத்துடன் நடைப்பிணமாக நடந்து வரும் தாயின் ஊர்வலம்தான் அவரது கதை. அந்த நல்ல தாய்க்கு இனி எதிர்காலம் என்பது ஒரு சிறிதளவும் இல்லை. தன்னைக் காக்க, கவனிக்க வேறு யாரும் இல்லை. தாங்க முடியாத வேதனை. இருப்ப தெல்லாம் இழந்து விட்ட பரிதாப நிலை. தனிமை, துன்ப உணர்வுடன் தள்ளாடி நடக்கிறார். வேறு எந்த நம்பிக்கையும் துணையும் இன்றி கூட்டத்தின் நடுவில் நகர்ந்து வருகிறார். வாழ்வில் எல்லா வற்றையும் இழந்த ஒரு பெண்ணின் சோகக்கதையாக நயீம் நகர விதவைப் பெண்ணின் கதையை வரைகிறார் லூக்கா.

இயேசுவின் காலத்தில் ஒரு கைம் பெண், தன் கணவனை இழந்த வர் மட்டுமல்ல, தன் திருமண, குடும்ப வாழ்வைத் தொலைத்தவர். நல்ல வாழ் வைத் தக்க வைக்கத் தகுதியற்றவர்.

நயீம் நகரப் பெண் சொல்லும் சில பாடங்கள்

கணவன் இறந்தது இவரது தவறால் என்று கூடப் பலர் குற்றம் சுமத்துவார்கள். தகுதியற்ற நிலையில், மோசமான சாபங் களுடன் வாழும் பெண்ணாக கைம் பெண்களைப் பார்ப்பர். இவர் மீது பல கற்பனைக் குற்றச்சாட்டுகளையும் சாற் றுவர். எல்லா இழப்புக்கும் காரணம் இவரே என்று தூற்றுவர். இப்படிக் கடை நிலையில் வாழும் பெண்கள்தான் இயேசுவின் காலக் கைம்பெண்கள். இவர்களின் இன்றைய நிலையும் மிகவும்
வேறுபட்டது அல்ல. இப்படி இழிவும் அவ மானமும் மிகுந்தவராக கைம் பெண்களை எல்லோரும் எண்ணினர். நயீம் நகர பெண்ணுக்கு நிகழ்ந்ததும் இதுதான். அவர் வாழ்வதற்கு அர்த்தம் தந்தது, அவரை வாழ வைத்தது அவரது ஒரே மகன். ஒட்டு மொத்த வாழ்வையும் மகனுக்காகவே வாழ்கிறார் அந்த பெண். அந்த மகனும் இறந்த போது எல்லாமே இழந்து விட்ட விரக்தி நிலை. இன்னும் அதிகமாக இழப்பதற்கு எதுவும் இல்லாத பரிதாப நிலை. எண்ணிப் பார்க்கவே முடியாத வேதனை நிலை. எல்லாம் இழந்து துடிக்கும் துயர நிலை. இருந் தென்ன, இறந்தென்ன? என்ற வேதனை நிலை. எதிர்கால நம்பிக்கையின்றி நயீம் நகர கைம்பெண்.

இறந்த மகனின் ஊர்வலத்தில் இறந்து போன ஒருவர் போல நடக்கிறார் எனலாம். **நயீம் என்ற அந்த நகரத் தின் பெயருக்கு மகிழ்ச்சி அல்லது சந்தோசம் என்பது பொருள்**. ஆனால் இந்த நகரத்தின் பெண்ணிற்கு மகிழ்ச்சி அல்லது சந்தோசம் அறவேயில்லை.

இதேபோன்ற ஒரு எதிர்மறைப் பெயர் விளக்கத்தைத்தான் விவிலிய நங்கை நகோமி யின் வாழ்விலும் பார்க் கிறோம். நகோமி என்பதற்கு மகிழ்ச்சி என்பது பொருள். ஆனால் நகோமியின் வாழ்வு கணவன், குடும்பம், பிள்ளைகள், மருமக்கள் எல்லாரையும் இழந்து, மகிழ் வைச் சிறிதளவும் சுவைக்காத ஒன்று ஆகும்.கலிலேயாவின் தென் பகுதியில் நயீம் என்ற ஒரு ஊரை இன்றும் நாம் பார்க்க முடியும். எலிசா இறைவாக்கினர் விதவைப் பெண்ணின் மகனுக்கு வாழ்வு கொடுத்த சூனேம் நகரமும் இதன் பக்கத்திலேயே உள்ளது. சவுல் குறி சொல்லுபவர்களை சந்தித்து சாமு வேலைக் காட்சி கண்ட என்டோர் பகுதி யும் இங்கிருந்து 3 கிலோ மீட்டர் தூரத் தில்தான் உள்ளது. இங்குள்ள குன்றுக ளில் இன்றும் அக்காலக் கல்லறைகளைப் பார்க்க முடியும்.

கைம் பெண்ணின் கதை முடிந்து போகும் தருணத்தில் தான்

ஜா.எல்பின்ஸ்டன்

எதிரே வருகிறார் இளைஞர் ஒரு வர். அவர் ஒரு கும்பலை வழிநடத்தி வருகிறார். இயேசு என்பது அந்த இளை ஞரின் பெயர். "நானே உயிர்ப்பும் வாழ் வும்" (யோவா 11:25) என்பது பாலஸ் தீனத்தின் மூலை முடுக்குகளில் அவர் ஓங்கி ஒலித்த போதனை. வாழ்வை, உயிர்ப்பை, உண்மையை, கடவுளை, கடவுளரசைக் கலிலேயாவில் போதித் தவர். கைம் பெண்ணுடன் இறந்த இளைஞனைத் தூக்கி வந்த கூட்டத்தி னரை எந்த அறிமுக உரையும் இன்றி திடீரென தடுத்து நிறுத்துகிறார். எதிரே திரே வந்த கூட்டத்தின் மத்தியில் நின்று, இறந்த இளைஞனின் உடலைத் தொடுகிறார். வாழ்வு சாவை சந்திப்பது போன்ற ஒரு உணர்வு அனைவர் உள் ளத்திலும் எழுகிறது. ஓரிரு நாட்களுக்கு முன் 40 கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பால் உள்ள கப்பர்நாகூமில் செந்தூ ரியனின் மகனுக்கு வாழ்வு கொடுத்ததாக இவரைப்பற்றி லூக்கா முந்திய பகுதியில் எழுதுகிறார்.

அதைத் தொடர்ந்து இங்கே இன்று இறந்த நயீம் நகரப் பெண்ணின் மகனை எதிர்கொள்வதாக லூக்கா சுட்டு கிறார். அடுக்கடுக்கான அற்புத சாகசங் களின் அடுத்த கட்ட நிகழ்வாகிறது நயீம் நகர கைம்பெண்ணின் மகன் உயிர் பெறும் நிகழ்வு.

அந்த கூட்டத்தில் வழிநடந்தவர் கள் வழிப்போக்கர்கள் அல்ல. அனை-வரும் அந்த கைம்பெண்ணுக்கு ஆறுதல் சொல்ல வந்தவர்கள். அழாதே என்ற சொல்லி ஆறுதல் சொல்லி நின்றவர்கள். இந்த ஆறுதல் மொழி அந்த கைம் பெண் பல முறைக் கேட்டு பழக்கப்பட்ட ஒன்று. அவர் கணவன் இறந்தபோதும் இந்த வார்த்தைகளைத்தான் எல்லாரும் சொன் னார்கள். அப்போது ஒரு மகன் இருந்த தால், அவர் அழாதிருக்க காரணம் இருந் தது. இன்றோ அந்த மகனும் இறந்து விட்டார். எல்லாம் இழந்து விட்டோம் என்ற உணர்வில் அழாதிருந்தால் இத யமே வெடித்து விடும் அளவு சோகம் அவரை அமிழ்த்தியிருந்தது. உதவி செய்ய இயலாத நிலையில் சோகத்தைக் குறைக்க உடன் அழுது நின்றது வந்திருந்த கூட்டம்.

ஊர் முழுவதும் திரண்டு ஓலமி டும் காட்சியினூடேதான் இயேசுவின் உரத்த குரல் ஓங்கி ஒலிக்கிறது. அவரது கரங்கள் பாடையைத் தொடுகின்றன (லூக் 7:14), "இளைஞனே நான் உனக் குச் சொல்லுகிறேன், எழுந்திரு" என்ற கட்டளையிடும் கனத்த உறுதியான குரல் ஒலிக்கிறது. அங்கிருந்த அனைவரும் ஒரு கணம் ஆடிப்போயிருக்க வேண்டும். அழுது வரும் சோகக் கூட்டத்தின் மத்தி யில் எழுந்திரு என்று பாடையில் படுத் திருக்கும் இளைஞனைத் தொடுவது யார் என்று விழித்துக் கொள்கிறது பெருங்கூட்டம். குரலைக் கேட்ட இளை ஞனோ "எழுந்து உட்கார்ந்து பேசத் தொடங்குகிறான்" (லூக்.7:15). ஆச்சரியம் தாளாத கூட்டத்தின் மத்தியில் அவனைத் தாயிடம் ஒப்படைக்கிறார் இயேசு.

அழுகையின் குரல் ஆனந்தக் குரலாகிறது. சோகத்தின் குரல் சந்தோசத் தின் குரலாகிறது. ஆர்ப்பரிப்பு, ஆரவா-ரம், அக்களிப்பு, அகமகிழ்வு யாவும் அந்த கூட்டத்தின் மத்தியில் ஒலிக்கிறது. "நம்மிடையே பெரிய இறைவாக்கினர் ஒருவர் தோன்றியிருக்கிறார் கடவுள் தாமே தம் மக்களைத் தேடி வந்திருக்கி றார்" என்று கூறிக் கடவுளைப் போற்றிப் புகழ்கிறார்கள் மக்கள் (லூக்.7:16).

கடவுளால் ஆகாதது ஒன்று மில்லை என்பதும், இறைவனின் வார்த்தை வல்லமை உள்ளது என்பதும், இறைவனின் அருள் நம்முடன் இருந்தால் நாம் எத்தகைய துன்பகரமான சூழ்நிலையிலும் வாழ்வில் வெற்றி பெற்று சரித்திரம் படைக்கலாம் என்பதும் மேற்படி சம்பவத்தின் மூலம் நாம் கற்றுக்கொள்ளவேண்டிய பாடங்களாகும்.

வேதாகமக் குறுக்கெழுத்துப் போட்டி - 01 விடைகள்

1 ஆ	2 பி	ர	3 கா	ம்	■	4 சீ	5 ஏ
ண்	ற	■	ணி	■	■	மோ	ற்
ட	ர்	6 சீ	க்	■	7 நோ	ன்	பு
8 வ	ல	க்	கை	9 ப	ணி	10 வி	டை
ர்	ய	11 ஆ	■	ற	■	ண்	ய
■	12 அ	13 உ	ண	வை	14 ஏ	ண	வ
15 வா	மை	வ	■	க	ரோ	ர	ற்
ளை	தி	மை	■	ள்	து	சு	றை

மீள நினைந்து...

'இரக்கம் உள்ளவராய் இருங்கள் இரக்கம் பெறுவீர்கள்' என்ற இறைவார்த்தையை துயருறுவோர் ஆண்டாகிய இவ்வாண்டில் எம் வாழ்வாகக் கொள்வோம்.

இரக்கத்தை எதிர்நோக்கி காத்திருக்கும் முதியோர்கள், ஏழைகள், உடல் ஊனமுற்றோர், நோயாளர்கள், ஆதரவற்றோர், அனாதைகள், விதவைகள், தனிமையல் வாழும் உள்ளங்கள் இன் னும் எத்தனையோ பேர் நம் கண்முன்னே நட மாடிக்கொண்டுதான் இருக்கின்றனர். அவர்களை காணும்போது நம் மனநிலை என்ன? நம்மாலான உதவி கரங்களை நீட்டி அவர்களை உவகை அடைய செய்கிறோமா? அவ்வாறு உதவிசெய்ய முன்வருவதே நாம் எடுக்கும் சிறந்த முடிவாகும். அதற்கு அடிப் படை யாக இருப்பது தான் அன்பு. அன்பிருந்தால் இரக்கம் பிறக்கும், இரக்கத்தின் மூலமே நாம் இறைவனை அடைய முடியும்.

தாவீது அரசன் "என் குற்றங்களை நான் உணர்கின்றேன். என் பாவம் எப்போதும் என் மனக்கண்முன் நிற்கின்றது" என கூறியது போல நம் குற்றங்களையும், பாவங்களையும் சிந்திப்போம். நன்மைகளை மட்டுமே செய்து வந்த இயேசுவுக்கே சிலுவை மரணம் வழங்கினார்கள் யூதகுலத்தினர், காரணம் பொறாமை, சாதி இனவெறி, பதவிவெ-றி. இன்று நாமும் பல இழிவான காரணங்களுக்காக எத்தனையோ பேரின் உள்ளங்களை சாகடிக்கிறோம். இவை அனைத்தும் இயேசுவுக்கே செய்யும் செயல் என உணருகிறோமா? இனியாவது அவர் சாயலாக உள்ள மனித குலத்தில் இயேசுவை காண்போம்.

ஏழை எளியோருக்கு இருப்பதை கொடுப்போம், பசியால் மடிவோரை தடுப்போம், தவறு செய்தால் தண் டனை என்பதை விட்டு அவர் திருந்திட நமது அன்பினை தருவோம், தங்கிட இல்லம், உடுத்துவதற்கு உடை உவப் புடன் வழங்குவோம். மலைப் பிரசங்கத்தில் இறைமகன் உரைத்த வாழ்வு தரும் இறைவார்த்தைகளை மனதில் இருத்துவோம். **பிரார்த்தனை செய்... இறைவனுக்கு அருகில் நீ செல்லலாம். பிறருக்கு உதவி செய்... இறைவன் உனக்கருகில் வருவார். (அன்னை தெரேசா)**

துயர் துடைக்கும் மறு கிறிஸ்துவாக வாழ ஓர் அழைப்பு

கிறிஸ்துவைத் தாங்கிய கிறிஸ்தவர்கள் மறு கிறிஸ்துவாய் வாழ மேலான ஒரு சிறப்பு மிக்க ஆண்டாக மலர்ந்துள்ளது 2020. கிறிஸ் துவைப் பிரதிபலிக்க அவர் போதனைகளில் சாதனையாளர்களாக வேண்டுமே தவிர சரித்திரத்தில் இடம் தேடுவதில் ஆர்வம் தேவையில்லை.

துயருறுவோர் ஆண்டாக நம் யாழ் திருச்சபை இவ்வாண்டை நினைவு கூர்ந்து அதற்குரிய நடைமுறைப் பயிற்சிகளை செய்யத் தூண்டுகின்றது. பிறர் துயர் கண்டு கரைந்த வர் நம் கிறிஸ்தவ ஆன்மீக வாழ்வின் கதா நாயகன் இயேசு. நற்செய்தியைப் புரட்டிப் பார்த் தால் அப்பட்டமாக வெளிப்படும் உண்மைகள் வாழ்வளிக்க வந்த இயேசு பரிதாபத்தோடு பாரி லுள்ளோரைக் கண்ணோக்கினார். பாவிகள், ஒதுக்கப்பட்டவர்கள், ஏழைகள், நோயாளிகள், துன்புறுகின்றவர்கள், ஆதரவற்றவர்கள் என ஒரு நீண்ட பட்டியலில் உள்ளவர்கள் நடுவில்தான் இயேசு களமிறங்கினார்.

விடுதலைப் போராட்டம் நடத்துவதற்கு விடி யலை நோக்கி நகர்த்துவதற்கு அதற்காக அவர் செய்த செயல்கள் மாவீரச் செயல்கள் அல்ல மாறாக அன்பு கொண்ட நெஞ்சம் கொண்டு மேற்கூறியவர்களுடன் நெருக்கமாகப் பழகினார். தங்கினார், உடனிருந்தார், பகிர்ந்தார், உணவருந்தினார், உறவாடினார், பசி தீர்த் தார், குணமாக்கினார், உயிரளித்தார், வழிகாட்டினார், தூக்கிவிட்டார், பரிவு காட்டினார். மொத்தத்தில் வாழ்வைக் கொடுத்தார். புதிய பாதையைத் திறந்தார்.

கிறிஸ்தவனாக, கிறீஸ்தவளாக, துறவியாக, குருவாக உள்ள ஒவ்வொருவருடைய வாழ்விலும் இன்று இயேசு செய்த செயலும், வாழ்ந்த வாழ்வும

அருட்சகோதரி மேரி றொபேட்சினி (செ.க)

சாத்தியமானதா? சாத்தியமாக முடியுமா? என வினா எழுப்ப வேண்டிய காலம் நம் கைகளில் இப்போது தரப்பட்டுள்ளது. ஆன்மீகப் புதுப்பித்தல் பயணத்தில் வளர்ச்சியை நோக்கிப் புதிய வாழ்வடைய திருஅவை நம்மைத் தூண்டுகின்றது. யாழ் திருஅவை நம்மைப் புதிய மாற்றத்திற்கு அழைத்துச் செல்ல விரும்புகின்றது. துய ருறும் எம் சகோதரங்களை இனம் கண்டு உடனிருந்து, உணர்வோடு ஏற்று, உற வோடு வாழ அழைக்கின்றது.

எம் நாட்டிலே, எம் சமுதாயத்திலே, நம் குடும்பங்களிலே எம் குழுக்களிலே பலதரப்பட்ட துன்பங்கள் சுமந்த நிலையில் வாழ்பவர்கள் இருக்கின்றார்கள். பல வேளைகளில் இனம்காணப்படுவதில்லை. அவசர உலகில் இயந்திரங்களாக மனிதர் கள் பயணிக்கும் காலமிது. சுழல் காற் றென சுழலும் என் மனித வாழ்வின் சக்கரத்தை சற்று விழிப்போடு மெதுவாக நகர்த்தி என் அகக்கண்களைத் திறந்து உணருவோமா?

அகக்கண்களுக்கு அதையில் ஒளியூட்டி, இத்தனை காலமும் திரையிட்ட உண்மை களை ஏற்றுக்கொண்டு சிந்தனையில் சீர்தூக்கிப் பார்த்து விழித்தெழுவோமா?

மீண்டும் மீண்டும் துன்புறும் கிறிஸ்துவை அடையாளம் காண இதயக் கதவுகளைத் திறந்து இடம்கொடுக்க முனை வோம். துயருறுவோர் பலருண்டு ஆனால் ஆறுதல் அடைவோர் வெகு சிலரே. இழப் புக்கள், வறுமை, நெருக்கடிகள், ஏமாற்றங் கள், இறப்புக்கள், ஏற்றுக்கொள்ளாமைகள், புரிந்து கொள்ளாமைகள், மன்னிக்க முடி யாதவைகள் போன்ற துன்பங்களில் உழ லும் உள்ளங்களில் மறைந்திருக்கும் விரக்தி நிலைகள், வாழ்வில் உயிரின் முடிவுக்குக் கொண்டு போய்ச் சேர்க்கும் பரிதாப நிலை கள் மலிந்து கிடக்கின்றன.

அள்ளிக்கொடுக்க வேண்டுமென் றால் பொருளும், பணமும் மட்டும் தேவை யில்லை. மானிடத்தை மாண்புடன் நேசிக் கும் நல்லுள்ளம் ஒன்றல்லவா தேவை. கொடுப்பதில் தானே இன்பமுண்டு, சுக முண்டு, விடியலுண்டு, வெற்றியுண்டு, அள் ளிக் கொடுக்கப் பணமில்லை, பொரு ளில்லை அது நிறைவு தருவதுமில்லை. ஆனால் அன்பைக் கொடுத்து ஆதரிக்க சித்தம் கொள்வோம். செவிமடுக்க நல்ல மனம் கொண்டு, இருகரம் நீட்டி ஏற்றுக் கொள்வோம். ஆதரவின்றித் தவிப் போர் மனம் குளிர வீறுநடை கொள்வோம். கரம்பிடித்துத் தூக்கி எடுப்போம், துயருறும் எம் சகோதரனை, சகோதரியை மனிதத்தன்மையடன் தாங்கி நின்று மனிதரில் வாசம் செய்யும் கிறிஸ் துவை எனக்குள் தாங்கித் தரிசிப்போம்.

துயருறும் மனித வாழ்வை சீர்மைசெய்து வளமை கொழிக்கச் செய்து ஆன்மீகப் பாதையில் தடம் பதிக்க மனம் கொள்வோம். யேசு பல வடிவங்க ளில் வலம் வருகின்றார். விசுவாசக் கண்கள் திறந் திருந்தால் தான் யேசுவைக் காணமுடியும்.

நற்செய்தி ஏடுகளில் வருகின்ற நபர்கள், சமாரியப் பெண், பேதுருவானவர், பார்வையற்ற குரு டன் ஆகியோர் யேசு அனுபவத்தின் பின் புதிய மனி தர்களாகிப் பலரை அவரிடம் அழைத்து வந்தனர். தாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம் என்பதை இன்னும் சிலர் எடுத்துக்காட்டினர். பிலிப்பு, யோவான் ஆகியோர் இயேசுவைச் சந்தித்த பின் தம் உடன் பிறந்த சகோதர்களையே கூட்டி வந்தார்கள். வாழ்வுக் குரியவரைத் தேடுவதில் தாகம் கொண்டவர்களா னதால் அதே நபர்கள் அதே இயேசுவைப் பல கோடி மக்களுக்குக் கொடுக்கும், பகிரும் அற்புத மனிதர்களாக மாறினார்கள். இயேசுவின் பாதங்கள் பணிந்தவர்கள், அதாவது அடிமட்டத்தில் இருந்தவர்கள் தலைநிமிர்ந்தார்கள்.

என் அன்பு சகோதரனே! சகோதரியே துயருறும் மானிடத்தில் மாண்பு செழிக்கச்செய்ய நீயும் நானும் ஒரு கருவி யாய் இயங்க நுழைந்திடுவோம் துயருறுவோர் நிழல்தேடி...

பொன் விழா

50வது திருமணநாள் வாழ்த்துக்கள்

07.02.2020

திரு.டாக்டர் கபிரியேல் எட்வேட்
திருமதி.எட்வேட் மேரி திரேஸ்ராணி

இறைவனுக்கு நன்றி கூறும் நாள் இன்று இப்பொன் நாளிலே வாழ்த்துகிறோம் உம் பொன்விழாவில்

பல்லாண்டு காலம் வாழ்க வளமுடன்..

AD 07

63 குருசோ வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
0772907493

பொன் விழா வாழ்த்து

திரு.திருமதி யேசுதாசன் பிரகாசியம்மா

நல்லறமாம் தமது இல்லறத்தில் ஐம்பது ஆண்டுகள் சீரிய வாழ்வு வாழ்ந்து **29.01.2020** அன்று அவுஸ்திரேலிய மண்ணில் தமது திருமண வாழ்வின் பொன் விழாவைக் கொண்டாடும் எமது உறவுகளான திரு திருமதி யேசுதாசன் பிரகாசியம்மா தம்பதியினரை இறையருளால் இன்று போல் என்றும் வாழ வாழ்த்துகின்றோம்.

AD 08

திரு.திருமதி யேக்கப் அலெக்சாண்ற்ரா
திரு.திருமதி சற்குணராஜா சந்திரா
மகன் செல்ரன் சுதாகரன்
செ.அகஸ்ரின் மைத்துனர்

மறைவில் 25ம் ஆண்டு நினைவு

அருட்பணி அன்டன் ராஜகாரியர் Mis.Ap.
யாழ் மறைமாவட்டம்

உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே என்னிடம் விசுவாசம் கொள்பவர் இறப்பிலும் வாழ்வார்'.
(யோவான் 11:25)

பாரில் பயணமது நிறைவுற்று நித்தியமும்
இறைவனில் சங்கமமாகி 25 ஆண்டுகள்
கடந்தபோதும் நினைவுகள் எம்மிடையே
நிழலாடுகின்றன. விண்ணகப் பிறப்பில் 25
ஆண்டுகளில் அகவை காணும் உங்களை
அன்போடு நினைக்கின்றோம்

Cousins -Tambinayagams

AD/06

விண்ணக வாழ்வில்

அமரர்
திரு.A.S அகஸ்ரின்
மண்ணில் : 22.08.1926
மரியின் மடியில் : 26.01.2019

அமரர்
திருமதி.E.P கருணாவதி அகஸ்ரின்
மண்ணில் : 03.11.1937
மரியின் மடியில் : 10.05.2019

அடைக்கல அன்னையின் அரவணைப்பில்
அமைதியாக இளைப்பாறும் எம் பெற்றோர்
இப்புவியில் இருந்து நீங்கினாலும்
எம் உள்ளத்தில் என்றும் நிலைத்திருக்கும் எம் பெற்றோர்
ஒற்றுமையாய் வாழ்ந்ததற்கு அடையாளமாக
இறைவனடியில் இணைபிரியாமல் இருக்கும் எம் பெற்றோர்
உங்கள் ஆத்மா அண்டவரின் முடிவில்லா ஒளியில்
என்றும் திளைத்திருக்க இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

அன்புடன்நினைவுகூரும்
குடும்பத்தினர்.

AD 09

விண்ணக வாழ்வில் 27வது ஆண்டு நினைவில்

மண்ணில்
13
06
1922

விண்ணில்
14
02
1993

அமரர்
சஞ்சு செபமாலை

"ஆண்டவரின் இல்லத்தில் என்
வாழ்நாள் எல்லாம் குடியிருக்க வேண்டும்" (தி.பா 27:4)

அன்பின் பிறப்பிடமாய், பண்பின் உறைவிடமாய்,
இரக்கத்தின் இருப்பிடமாய், ஒழுக்கத்தின் முன்மாதிரியாய்,
எம் வாழ்வின் வழிகாட்டியாய் வாழ்ந்து,
எம் குடும்பத்துக்கு ஒளியாய் இருந்த அன்பு ஜயாவே,
நீங்கள் என்றும் ஆண்டவரின் உறவில்
இன்புற்று இருக்க செபித்து நிற்கின்றோம்.

மணற்குடியிருப்பு,
முல்லைத்தீவு.

அன்புடன் செபிக்கும்,
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

விண்ணக வாழ்வில் ஓராண்டு நினைவுகள்

மண்ணில்
26
02
1943

விண்ணில்
22
01
2019

அமரர் மனுவேல்பிள்ளை பிரசாத்நாயகம்
(S.L.S)

"நான் நல்லதொரு போராட்ட த்தில் ஈடுபட்டேன் என் ஓட்ட த்தை முடித்து விட்டேன். விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன். இனி எனக்கென வைக்கப்பட்டிருப்பது நேரிய வாழ்வுக்கான வெற்றி வாகையே"
(2 தீமோத்தேயு 4:7-8)

இரக்கம் நிறைந்த இயேசுவே, உமது அடியானாகிய மனுவேல்பிள்ளை பிரசாத்நாயகத்தை இவ்வுலக வாழ்வில் உமது அருளால் நிரப்பிய கருணைக்காகவும், அவர் வழியாக நாம் பெற்றுக்கொண்ட அனைத்து ஆசீர்வாதங்களிற்காகவும் உமக்கு நன்றி கூறுகின்றோம். உமது அழைப்பை ஏற்று உம்பாதம் வந்திருக்கும் அவர்தம் குறைகளை மன்னித்து உம்முடைய நித்திய பேரின்பத்தில் சேர்த்தருள உம்மை இரந்து வேண்டுகின்றோம், ஆமென்

AD10

ஆனந்தபுரம் கிழக்கு,
கிளிநொச்சி

குடும்பத்தினர்

செயற்பட்டு மகிழ்வோம் போட்டியில் தேசிய மட்டத்தில் சென் பற்றிக்ஸ் கல்லூரி மாணவர்கள் சாதனை

இலங்கை கல்வி அமைச்சு அகில இலங்கை ரீதியில் நடாத்திய ஆரம்பப் பிரிவு மாணவர் களுக்கான செயற்பட்டு மகிழ்வோம் (KIDS ATHLETICS) போட்டியின் இறுதிப் போட்டியில் சென் பற்றிக்ஸ் கல்லூரி தரம் 04, தரம் 05 மாணவர்கள் தேசிய மட்டத்தில் இரு பிரிவுகளிலும் தங்கப் பதக்கத்தைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளனர்.

இப்போட்டி கண்டி நாவலப்பிட்டி ஜெயதிலக விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. இப்போட்டியில் 72 பாடசாலைகள் அகில இலங்கை ரீதியில் போட்டியிட்டமை குறிப்பிடத்தக்கது.

தேசிய மட்டத்தில் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வில் அல்லைப்பிட்டி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் வித்தியாலயம் சாதனை

தேசிய மட்டத்தில் இடம்பெற்ற செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வில் அல்லைப்பிட்டிறோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் வித்தியாலயத் தின் தரம் 3,4,5 மாணவர்கள் ஆண் பெண் இரு பாலாருக் குமிடையிலான போட் டியில் முறையே தரம் 3 அணி 3ம் இடத்தைப் பெற்று, தரம் 4 அணி 1ம் இடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தையும் தரம் 5 3ம் இடத்தைப் பெற்று வெள்ளிப்பதக்கத்தையும் பெற்று சாதனை புரிந்துள்ளார்கள்.

(தொடர்ச்சி 02ம் பக்கம்)

விளான் பங்கில் இளையோர் ஒன்றுகூடல்

விளான் பங்கு இளையோருக்கும் புனித சவேரியார் குருமட நான்காம் வருட இறையியல் மாணவர்களுக்குமான ஒன்றுகூடல் மறைமாவட்ட இளையோர் ஆணைக்குழு இயக்குநர் அருட்திரு A.அன்ரன் ஸ்ரீபன் அடிகளாரின் தலைமையில் கடந்த வாரம் நடைபெற்றது. இந் நிகழ்வினை விளான் பங்குத்தந்தை அருட்பணி மனுவெல் அடிகளார் ஒழுங்குபடுத்தியிருந் தார்.

இந்நிகழ்வில் 15 அருட்சகோதரர்களும் 60 இற்கும் அதிகமான இளையோரும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் தலைமைத்துவப் பயிற்சி, விளையாட்டு, கருத்துரை என்பன நடை பெற்றன. வளவாளர்களாக திருமறைக்கலாமன்றத்தைச் சேர்ந்த கரன்சன் ஜெகன், சதீஸ் ஆகியோர் இளையோரை வழிப்படுத்தி இந்நிகழ்வினை சிறப்பித்தார்கள்.

தீவகத்தில் கியூரியா ஒன்றுகூடல்

தீவக கியூரியாக் கூட்டம் 12.02.2020ல் இடம்பெற்றபோது ஆன்ம ஆலோசகர் அருட்திரு A.மைக் மயூரன் பிரசீடிய, கீயூரியா அலுவலர்கள் அர்ப்பணம், ஆர்வத்துடன் செயல்படும் போது அங்கத்தினர்களும் சிறப்பாகப் பங்குபற்றுவதைக் காண்பீர்கள் என்றார். யாழ் கொமிற்சிய இயக்குநர், அலுவலர்களும் பங்குபற்றினார்கள்.

கச்சதீவு புனித அந்தோனியார் திருத்தல விழா

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்திருவிழா எதிர்வரும் மார்ச் 6ம், 7ம் திகதிகளில் நடைபெறும்

மார்ச் 6ம் திகதி வெள்ளி மாலை - நற்கருணை விழா

மார்ச் 7ம் திகதி சனி காலை - திருநாள் திருப்பலி

-குருமுதல்வர் -

ஆயர் இல்லம்
யாழ்ப்பாணம்.

மாங்குளம் பங்கில் புதிய பங்கு பணிமனை

யாழ் மறைமாவட்டத்தில் முல்லைத்தீவு மறைக்கோட்டத்தில் அமைந்துள்ள மாங்குளம் பங்கிற்கான புதிய பங்குப்பணிமனை 19.01.2020 ஞாயிற்றுக்கிழமை அன்று யாழ். ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களால் ஆசீர்வதித்துத் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வு மாங்குளம் பங்குத் தந்தை அருட்திரு மரியதாஸ் E.S.C. அடிகளின் தலைமையில் நடைபெற்றது.

திருப்பாலத்துவசபைத் தினம் - 19.01.2020

குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில்

ஆனைக்கோட்டை அடைக்கல அன்னை ஆலயத்தில்

யாழ். யுவானியார் ஆலயத்தில்

தும்பளை புனித லூர்து அன்னை திருத்தல பெருவிழா

02.02.2020 - 11.02.2020

02.02.2020 - நவநாள் வழிபாடுகள் - திருச்செபமாலை மாலை 4.30 மணி

10.02.2020 - நற்கருணைத்தினம் - திருச்செபமாலை மாலை 5.00 மணி
(யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணியாளர் ப.யோ.ஜெபரட்ணம் அடிகளார் தலைமையில்)

11.02.2020 - திருத்தலப் பெருவிழா

முதல் திருப்பலி - காலை 05.30 மணி

திருநாட்திருப்பலி - காலை 07.00 மணி

(யாழ். மறைமாவட்ட ஆயர்
பேரருட்கலாநிதி. ஜஸ்ரின் ஞானப்பிரகாசம்
ஆண்டகை தலைமையில்)

மறையுரைஞர்: அருட்பணியாளர் தயாபெரேரா(OMI)

திருத்தலப்பரிபாலர்

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2020ம் ஆண்டு ஜனவரி மாதம் 26ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.